22 APR


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 சுவினருவர் ஆண்டு 2030சித்திரை 09 வியாழக்கிழமை(22-04-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்124


# கிழக்கில் 2 இடங்களில் மனிதப் புதைகுழிகள்

## நாடாளுமன்றத்தில் ஜோசப் எம். பி. தகவல்

கொழும்பு, ஏப்ரல் 22

கிழக்கு மாகாணத்தில் வாழைச்சேனையில் உள்ள நாவலடி மற்றும் சத்துருக்கொண்டான் ஆகிய இடங்களில் மனிதப் புதைகுழிகள் இருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்றும்—

அந்த மனிதப் புதைகுழிகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அவற்றைத் தோண்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும்—

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் போது இந்த மனிதப் புதைகுழிகள் தொடர்பான தகவல்களை அவர் வெளியிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பாக அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் திகதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி ரௌி



அப்ப மனிதப் புதைகுழிகளில கம்போடியாவின் றெக்கோட்டை உடைச்சு விடுவினம் போல...

## பலாலி - இரத்மலானை விமானச் சேவை ரத்து

### காலநிலை சீர்கேட்டினால்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

காலநிலை சீரில்லாத காரணத்தால் பலாலி — இரத்மலானை பயணிகள் விமான சேவை நேற்று ரத்துச் செய்யப்பட்டதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

காலநிலை இன்று சீராகும் பட்சத்தில், நேற்று பயணம் செய்ய பலாலிக்கு அழைத்துச் செல்லப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்ட பயணிகள் இன்று செல்ல ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்று பயணம் செய்வதற்காக ரிக்கெட் பெற்றவர்களில் முதல் சேவைக்குரிய பயணிகள் நாளையும் —

இரண்டாவது சேவைக்குரிய பயணிகள் நாளை மறுதினமும் அழைத்துச் செல்லப்படுவர்.

நாளையும், நாளை மறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அம்புலன்ஸ் சேவைக்குதடை

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் 3 நோயாளர் உயிரிழப்பு

வவுனியா, ஏப்ரல் 22

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து வவுனியாவுக்கு அவசர சிகிச்சைக்கு நோயாளர்களை அழைத்துச் செல்லும் அம்புலன்ஸ் சேவைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் கிளிநொச்சி வைத்தியசாலையில் மூன்று அவசர நோயாளர்கள் நேற்று முன்தினம் உயிரிழந்தனர் என்று வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு வாகனங்கள், அம்புலன்ஸுகள் செல்ல விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் இருந்து வவுனியாவுக்கு அவசர நோயாளர்களைக் கொண்டு செல்ல முடியாத நிலைஏற்பட்டுள்ளதுஎன்றும்—

மேலதிக சிகிச்சை பெற முடியாத நிலையில் ஒரு பெண்ணும், இரு ஆண்களும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் உயிரிழந்தனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

மேலும் பல அவசர நோயா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எலும்புகள் இன்று கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

யாழ். துரையப்பா ஸ்ரேடியம் புதைகுழியிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட மனிதமண்டைஓடுகள் மற்றும் எலும்புகள் கொழும்பு சட்ட வைத்திய அலுவலகத்தைச் சேர்ந்த ஆலோசனை சட்ட வைத்திய அதிகாரி எல். பி.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# காங்கிரஸ் தவிர்ந்த எதிர்க்கட்சிகள் மாற்று அரசு அமைப்பதற்கு முயற்சி

புதுடில்லி, ஏப்ரவ் 22

காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய எதிர்க்கட்சிகள்

### நேற்று இரவு ஆராய்ந்தன

நேற்று புதுடில்லியில் கூடி மாற்று அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக ஆலோசனை நடத்தின.

புதுடில்லியில் லோக் தந்திரிக் மோட்சா அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த ஆலோசனைக் கூட்டம் தற்போதைய அரசியல் நெருக்கடியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி இருப்பதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர்களான சந்திரசேகர், தேவகௌடா, ஐ. கே. குஜ்ரால் ஆகியோரும்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மடு முகாமில் தங்கியிருந்த ஐந்து இளைஞர்கள் குறித்து தகவல் இல்லை

மன்னார், ஏப்ரல் 22

படையினரால் விடுவிக்கப்பட்டுள்ள மடுப்பகுதி அகதி முகாமில் தங்கியிருந்த ஐந்து இளைஞர்கள் குறித்துத் தகவல் இல்லை என்று அவர்களது உறவினர்கள் மடு த்தேவாலய குருவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ உறுப்பினர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, ஏப்ரல் 22

மட்டக்களப்பு காத்தான்குடியில் சந்தைக்குச் சென்றுகொண்டிருந்த ரெலோ உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் இடைமறிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆரையம்பதி ரெலோ அலுவலகத்தில் பணியாற்றும் கமால்தீன் அன்வர் [வயது 29] என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் என்று அடையாளம் காணப்பட்டது

[இ-6-21]

## கிளிநொச்சியிலும் எலும்புக் கூடுகள்!

### இதுவரை 25 கண்டுபிடிப்பு

வவுனியா, ஏப்ரல் 22

கிளிநொச்சி மாவட்டம் விடுவிக்கப்பட்ட பின்னர் இதுவரை அங்கு 25 மனித எலும்புக் கூடுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

கிளிநொச்சி மாவட்டம் படையினர் வசம் இருந்த சம

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் தொடர்பான விசாரணை

### தொடர்ந்து நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகள் கொழும்பில் இருந்து வந்த பொலீஸ் புலனாய்வுப் பிரிவினால் யாழ். பொலீஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் தொடக்கம் நடத்தப்பட்டு வருகின்றன.

தினமும் 50 பேரை விசாரணை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் குறைந்தளவு எண்ணிக்கையானோரே இந்த விசாரணைக்குச் சமுகமளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு நாள்களும் 35 பேர் வரை இந்த விசாரணைக்குழு முன் தோன்றிச் சாட்சியமளித்தனர்.

மேற்படி விசாரணைக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி வரிசையில் வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, ஏப்ரல் 22

அரசில் அங்கம் வகித்த இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சமசமாஜக் கட்சிப் பிரமுகருமான வாசுதேவநாணயக்கார அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசைக்கு மாறியுள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாகச் செயற்படுகின்றது என்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தெற்கில் மழை தொடர்கிறது

கொழும்பு, ஏப்ரல் 22

தெற்கில் தொடரும் மழை காரணமாக வழமை நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, மாத்தறைப் பகுதிகளில் தொடரும் மழையால் இதுவரை 17 ஆயிரம் குடும்பங்கள் அகதிகளாகியுள்ளன.

பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள அவர்களுக்கு உடன் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீதிகளை மேவி வெள்ளம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அருந்ததி நிர்மலநாதன்

(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியரும் தற்போது திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்ததி நிர்மலநாதன் 20 04-99 அன்று திருகோணமலையில் சிவபதமடைந்தார்.

அன்னார் மீசாலையைச் சேர்ந்த வினாசித்தம்பி நிர்மலநாதன் (களஞ்சியப் பொறுப்பாளர், நெல் சந்தைப்படுத்தும் சபை, திருகோணமலை) அவர்களின் அன்பு மனைவியும் அஜிந்தா (சுவிஸ்), சகுந்தன் (திருமலை), நிரஞ்சனா (திருமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரகு (சுவிஸ்) அவர்களின் அன்பு மாமியாரும் ஆதீசன் (சுவிஸ்) அவர்களின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(22-04-99) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்குத் திருகோணமலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தயவுடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:

செல்வி ஷீலா வைத்திலிங்கம்
(பெறாமகள்)
உசன் மிருசுவில்.

தொ. பேசி இல. 026/22552

(65063)

## சிற்றம்பலம் சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

பொன்னாலை வைரவர் கோயிலடியைச் சேர்ந்த சிற்றம்பலம் சுப்பிரமணியம் அவர்கள் 21-4-99 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் சிற்றம்பலம் (K. S T. Tex. திருநெல்வேலி), சிற்சபேசன், ஞானமூர்த்தி (றேடியோ, T. V. திருத்துநர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவகி, சிவகாமசுந்தரி ஆகியோரின் அன்பு மாமனாரும் கீர்த்தனன், அரவிந்த், அனந்தன், ஷேத்திரபாலன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-4-99) வியாழக்கிழமை 10. 00 மணிக்கு திருநெல்வேலியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சு. ஞானமூர்த்தி

விவசாயப் பாடசாலை அருகில்,
திருநெல்வேலி.

(65057)

## கந்தசாமி சிவஞானச்சந்திரன்

(சந்திரன்)

கந்தசாமி சிவஞானச்சந்திரன் நேற்று முன்தினம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாவட்ட நீதிபதி கந்தசாமி-சிவபாக்கியம் தம்பதிகளின் ஏக புதல்வனும், விஜயலக்சுமியின் அன்புக் கணவரும், செல்வி சந்திரிகாவின் (வட்டு. இந்துக் கல்லூரி மாணவி) அவர்களின் பாசமிகு தந்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21-04-99) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:

சி. விஜயலக்சுமி
(மனைவி)

அடைக்கலந்தோட்ட ஒழுங்கை,
வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

(65056)

## வேலுப்பிள்ளை குமாரசாமி

[ஓய்வுபெற்ற உதவி சுங்க கலெக்டர் — கொழும்பு]

இல. 62, இராச வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட வே. குமாரசாமி 20 - 04 - 99 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு திருமதி ஆ. வேலுப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரனும், திருமதி கு. சரோஜினிதேவியின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற திரு. சின்னத்துரை [ஓய்வுபெற்ற புகையிரத உத்தியோகத்தர்], திருமதி சி. காமாட்சியம்மா [ஆஸ்திரேலியா] ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி இ நிர்மலா, உ. சியாமளா [ஆஸ்திரேலியா], திரு. கு. பாஸ்கரன், கு. தயாகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதிகள் சோ. இராஜேஸ்வரி, த. மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. த இர சலிங்கம், கி. உதயகுமார் [ஆஸ்திரேலியா], திருமதி பா. மனோ [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமனாரும், காயத்திரி, கஜன், அர்ஜுன் ஆகியோரது பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று [22-04-99] வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திரு திருமதி த. நாகராசா
[மைத்துனர்]

1160/14, அருளம்பலம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி/7268)

## அன்பளிப்பு

கொழும்புத்துறை, ஏப்ரல் 22

சரசாலை நுணுவில் விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சரசாலை இந்து மன்றம் அப்பியாசக் கொப்பிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (க-30)


## தேவை

சமையல் உதவி ஆள் தேவை

ஹொட்டல் றொலக்ஸ்

340, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
ஐஸ்கிறீம் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

(65059)

(21 - 04 - 99)
நேற்று நடைபெற்ற
மாதாந்த பயிற்சிப் பரீட்சை
வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

BOND யாழ் நகர்.

(65060)

## நாகம்ஸ்

சுன்னாகம்.

இன்று
பிரபுதேவா - கயோல்
அரவிந்தசாமி நாஸர்
நடித்த
மின்சாரக் கனவு
காட்சிகள்: 11-00.2-30
(புதியநேரம்)

(65 58)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று
ரஜனி - சௌந்தர்யா
நடித்த
படையப்பா
காட்சிகள்:
9-00, 12-00, 3-00
FAX No. 070-212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223

(64970)

## ராஜா

யாழ்ப்பாணம்.

சூரியா - முரளி - ஜீவிதா
ரசிகா - மணிவண்ணன்
விவேக் - ராதிகா - நாஸர்
மற்றும் பலர் நடித்த
காதலே நிம்மதி
இன்று காட்சிகள்
10-30, 2-00

(சி/7100)

## ராஜா 'B'திரை

யாழ்ப்பாணம்

ரஜனி - சிவாஜி
சௌந்தர்யா
மற்றும் பலர் நடித்த
[illegible]
இன்று காட்சிகள்
10-30, 2-30

(சி/7266)


## கண்டெடுக்கப்பட்ட தங்கச் சங்கிலி

நீர்வேலி, ஏப்ரல் 22

கண்டெடுக்கப்பட்ட பெறுமதிமிக்க தங்கச் சங்கிலி ஒன்று நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும்—

உரியவர்கள் தக்க ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறும் மேற்படி சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (க-110)

# கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் எழுதுநராகக் கடமையாற்றும்

செல்வி சா. சந்தானலெட்சுமி

அவர்களின் அன்புத் தந்தையார்

## கனகசபை சாம்பவமூர்த்தி

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அன்னாருக்கு எமது அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

உதவி அரசாங்க அதிபர்
மற்றும்
பணிமனை உத்தியோகத்தர்கள், பணியாளர்கள்,
கிராம உத்தியோகத்தர்கள்,
வெளிக்கள உத்தியோகத்தர்கள்.

[65062]

# கண்ணீர் அஞ்சலி

## வேலுப்பிள்ளை குமாரசாமி

(ஓய்வு பெற்ற உதவி சுங்க கலெக்டர், கொழும்பு)

20- 04- 99 அன்று ஆஸ்திரேலியாவில் காலமான வேலுப்பிள்ளை குமாரசாமி அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாபூஷணம்
ஸ்தபதி ஆறுமுகம் ஜவரெட்ணம்
ஆச்சாரியாரும் குடும்பத்தினரும்

''ஆறுமுகம் சிற்பாலயம்''
பத்திரகாளி கோயலடி,
திருநெல்வேலி.

(சி/7270)

# மரண அறிவித்தல்கள்

## இராமநாதர் கனகசுந்தரம்

(நயினாதீவு)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முள்ளியவளையை வதிவிடமாகவும் கொண்ட இராமநாதர் கனகசுந்தரம் 19-4-99 அன்று முள்ளியவளையில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான இராமநாதர் - இலட்சுமி தம்பதிகளின் புத்திரரும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - சிவயோகம் தம்பதிகளின் பெறாமகனும் வீரவாகு, பரமலிங்கம், புனிதவதி, தனரெத்தினபூபதி, புஸ்பராணி, பூலோகசுந்தரி, ஞானசோதி ஆகியோரின் அருமைச் சகோதரரும் புஸ்பலீலாவதி, சாருகாசினி, ஈஸ்வரி, வேதாரோகினி, நவநிதி, ஞானோதரன், ஞான வரோதயன், ஞானகாந்தன் ஆகியோரின் பாசமிகு உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முள்ளியவளையில் 20-4-99 அன்று நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிள்றோம்.

தகவல்:

ஈஸ்வரி, மகேஸ்வரன்

முள்ளியவளை.

(65065)

## சுந்தரம் தர்மலிங்கம்

ஓய்வுபெற்ற கொழும்பு துறைமுக அதிகாரசபை உத்தியோகத்தரும், தாவடியைப் பிறப்பிடமாகவும், 'ஸ்கந்த வாசா' உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்டவருமான சுந்தரம் தர்மலிங்கம் 21 - 04 - 99 மாலை 7 மணியளவில் இறைபதமெய்தினார்.

அன்னார் பூங்கொடிதேவியின் அன்புக் கணவரும், அம்பிகா (லண்டன்), மகேஸ்வரன் (கனடா), ரேனுகா, மேனகா, ரவி (நோர்வே), சந்திரிகா (நோர்வே), மல்லிகா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சர்வேஸ்வரமூர்த்தி, ராதா, துரைசிங்கம், மகேந்திரன், கலைவாணி, நந்தகுமார், கிரிதரன் ஆகியோரின் மாமனாரும், விதுரன், திருமதி றோரா சுகுணநாவலன், சசீவன், நிமலன், நிருஷா, விதுர்ஷன், விதுஷிகா, விதுஷியன், ஹரிகாந்தி, நிரோஷான், கபிலன், துவாரகன், டினேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், ராகரத்தினம், காலஞ்சென்ற ஐயாத்துரை, திருச்செல்வம், அன்னலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, யோகநாயகி, நவரத்தினம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22-04-99) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் உரும்பிராய் இருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

தர்மராஜா - மகேந்திரன்
(மருமகன்)

''ஸ்கந்த வாசா'',
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(சி/7272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினம்பறக்கும் 16,000 விமானங்கள் புவிச் சூழலை மாசுபடுத்துகின்றன

சன்ஜோஸ், கோஸ்ரறிக்கா, ஏப்ரல் 22

நாளாந்தம் பறக்கும் சுமார் 16 ஆயிரம் விமானங்கள் புவியின் சூழலை மாசுபடுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பதாக சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கோஸ்ரறிக்கா தலைநகர் சன் ஜோஸில் நடைபெற்ற உலக காலநிலை மாறுதல் தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்ட சூழலியலாளர்களே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

கைத்தொழில் மயமாகும் நடவடிக்கைகளுடன் விமானப் பறப்புகளும் சூழலை மாசடைய வைப்பதில் முக்கிய பங்காற்றுவதாகவும் புவியின் வெப்ப அதிகரிப்புக்குக் காரணமாக அமைவதாகவும் அந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

விமானங்கள் வெளியிடும் புகை பச்சை வீட்டுத் தொகுதியைப் பாதிப்பதாக அவர்கள் எச்சரித்தனர். (ஐ)

### பலஸ்தீனியர்களின்

# சுதந்திரப் பிரகடனத்தை ரஷ்யா ஆதரிக்கும்

கெய்ரோ, ஏப்ரல் 22

பலஸ்தீனம் சுதந்திர நாடாக அறிவிக்கப்படும் போது ரஷ்யா அதனை ஆதரிக்கும் என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரபு லீக்கின் தலைவருக்கு எழுதிய கடிதம் ஒன்றிலேயே அவர் இந்தஆதரவைத் தெரிவித்துள்ளதாக எகிப்துக்கான ரஷ்ய தூதர் கூறியுள்ளார்.

மே மாதம் 4 ஆம் திகதி பலஸ்தீனத்தை சுதந்திர நாடாக அறிவிப்பதை ஒத்திப் போடுமாறு இது நாள் வரை கோரிவந்த ரஷ்யா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டிருப்பது இதன் மூலம் தெரிவதாக அவதானிகள் குறிப்பிட்டனர். (ஐ-க)

## மொனீக்கா முடிவு

அமெரிக்காவில் இருந்து லண்டனுக்கு இடம்பெயர்ந்து வசிக்க மொனீக்கா லுவின்ஸ்கி திட்டமிட்டுள்ளதாக 'ரைம்ஸ்' நாளேடு தெரிவிக்கிறது. (ஐ)

# வாஜ்பாய்க்கே ஆதரவு; தி.மு.கவுடன் சேர்வோம்!

### ராமதாஸ் அறிவிப்பு

சென்னை, ஏப்ரல் 22

அரசமைப்பதற்கு வாஜ்பாய்க்கு மீண்டும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்றும், வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதாக் கூட்டணிக்கே மீண்டும் ஆதரவு அளிக்கப் போவதாகவும் பாட்டாளி மக்கள்கட்சி அறிவித்துள்ளது

நேற்று சென்னையில் நடைபெற்ற அக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய அதன் நிறுவனத் தலைவர் டாக்டர் பா. ராமதாஸ் இதனை அறிவித்தார்.

''மீண்டும் தேர்தல் வரும் சமயத்தில் எமது ஆதரவு தேவையில்லை என அ.தி.மு.க நினைக்குமானால் நாங்கள் தி.மு.க. வுடன் கூட்டுச் சேர்வோம்'' — என்றும் ராமதாஸ் அறிவித்தார். (ஐ-க)

# புதிய அரசு குறித்து நிச்சயமற்ற நிலைமை

## 272 உறுப்பினர் ஆதரவு என்கிறார் சோனியா

புதுடில்லி, ஏப்ரல் 22

நம்பிக்கை வாக்கெடுப்பில் பாரதீய ஜனதாக் கூட்டணி அரசு தோற்கடிக்கப்பட்டு நான்கு நாள்கள் கழிந்து விட்ட நிலையிலும் இந்தியாவில் புதிய அரசை அமைக்கப் போவது யார் என்பதில் நிச்சயமற்ற நிலையே நீடிக்கிறது.

மாற்று அரசை அமைக்கத் தயார் என்று காங்கிரஸ் கட்சி கூறியுள்ளபோதும் அரசமைக்கத் தேவைப்படும் 272 உறுப்பினர்களின் பட்டியலைச் சமர்ப்பிக்க இன்னும் ஓரிரு நாள் அவகாசம் அதற்குத் தேவைப்படுவதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. மாற்று அரசு அமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் சமாஜவாதி கட்சி மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு தலைமையில் அரசு அமைக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளது.

காங்கிரஸ் கட்சிக்கு 272 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகவும்—

இதற்கான கடிதங்களை இன்னும் இரண்டு நாள்களுக்குள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப் போவதாகவும்—

காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி நேற்றுத் தெரிவித்தார்.

ஜனாதிபதியைச் சந்தித்து கலந்தாலோசித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசும் போது அவர் இவ்வாறு கூறினார்.

மாற்று அரசின் தன்மை குறித்து சமாஜ்வாதிக் கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவின் கருத்து இன்னமும் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை என்பதை சோனியா ஒப்புக்கொண்டார்

இதேவேளை—

அரசியல்நிலைமை சீராகும் வரை புதுடில்லியிலேயே தங்கி இருக்குமாறு பாரதீய ஜனதாக் கட்சி அதன் மக்களவை உறுப்பினர்களுக்கும் கூட்டணி கட்சி உறுப்பினர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளது.

270 உறுப்பினர்களின் (மக்களவைத் தலைவர் உட்பட) ஆதரவுப் பட்டியலை உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி இன்று ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளார். (ஐ-க)

# தெலுங்கு தேசம் எம்.பி. காங்கிரஸில் இணைவு

ஹைதராபாத், ஏப்ரல் 22

தெலுங்கு தேச கட்சியின் மக்களவை உறுப்பினர் விஜயராமராஜேஸ் காங்கிரஸ் கட்சிக்குத் தாவியுள்ளார்.

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு இதனை உறுதிப்படுத்தி உள்ளார்.

புதிய அரசு அமைப்பது தொடர்பாக முடிவு எடுப்பதற்கு முன் இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு அவர் ஜனாதிபதி நாராயணனிடம் கேட்டுள்ளார்.

எம்.பிக்களை விலைக்கு வாங்கும் பேரத்தில் காங்கிரஸ் கட்சி ஈடுபட்டுள்ளதாக நாயுடு குற்றஞ்சாட்டினார். (ஐ-க)

# சோஷலிஸ்ட் கட்சி அலுவலகம் பெல்கிரேட்டில் தாக்கப்பட்டது!

## அடிபணியப்போவதில்லை என்கிறது யூகோ.

பெல்கிரேட், ஏப்ரல் 22

யூகோஸ்லாவிய அதிபர் சொலபொடான் மிலோசெவிக்கின் ஆளும் சோஷலிஸ்ட் கட்சி அலுவலகம் நேட்டோ படைகளின் தாக்குதலுக்கு இலக்கானதாக அறிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடந்த சமயத்தில் குறைந்தது 15 பேராவது அந்தக் கட்டடத்தினுள் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை—

யூகோஸ்லாவியாவின் நொவின்சா நகரம் உட்படப் பல பகுதிகள் நேற்று அதிகாலை நேட்டோ படைகளின் கடும் தாக்குதலுக்கு இலக்காகின.

தொழிற்சாலை ஒன்றை 6 ஏவுகணைகள் தாக்கியதில் பெரும் தீ மூண்டது. பெல்கிரேட் நகரின் மத்திய பகுதியிலும் பெரும் வெடி ஓசைகள் கேட்டன.

இந்தத் தாக்குதல்களுக்கு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை என்று பெல்கிரெட் அரசு திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இதேவேளை—

யூகோஸ்லாவிய படைகள் இந்தப் போரைத் தரையிலும் விஸ்தரிப்பதற்கு முயன்று வருகின்றன என்ற கூற்றை ஐ. நா. பாதுகாப்புச் சபை ஆராய்ந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில்—

கொசோவோ நெருக்கடியை சமாதான வழியில் தீர்க்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ரோமில் நேற்று நடைபெறவிருந்த சமாதான மாநாட்டில் நோபல் சமாதானப் பரிசு பெற்ற எட்டுப் பேர் கலந்து கொள்ள இருந்தனர். (ஐ-க)

### யுத்தத்துக்கு மத்தியில்

# அமெரிக்க - சேர்பிய காதலர்கள் திருமணம்

சைப்பிரஸ், ஏப்ரல் 22

நேட்டோ படைகள் நடத்திவரும் யுத்தத்துக்கு மத்தியில் நீண்ட நாள் காதலர்களான சேர்பியப் பெண் ஒருவரும் அமெரிக்க இளைஞனும் சைப்பிரஸ் நாட்டில் இணைந்து திருமணம் புரிந்து கொண்டனர்.

அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் மேரிலாண்டைச் சேர்ந்த கத்தோலிக்க இளைஞரான ஸ்ரீவ் றீஸ் (வயது 31) சேர்பியாவைச் சேர்ந்த ஓத்தடொக்ஸ் சட்ட மாணவியான ரடினா ரொமனோவிச் (வயது 23) ஆகிய இளம் காதலர்கள் இருவருமே தங்கள் தாய்நாட்டிற்கு வெளியே திருமணம் புரிந்துகொண்டனர்.

யுத்தம் முடிந்ததும் தங்கள் திருமணக் கொண்டாட்டத்தை பெல்கிரேட்டில் நடத்த இவர்கள் தீர்மானித்துள்ளனர்.

எதிரி தேசத்தவர்களாக இருந்தபோதும் இத்திருமணம் மகிழ்ச்சியையும், நிறைவையும் தருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# கடலில் நில நடுக்கம்

அக்லாந்து, ஏப்ரல் 22

நியூஸிலாந்தின் தென்பகுதிக் கடலில் நேற்றுமுன்தினம் நில நடுக்கம் ஏற்பட்டது.

ரிச்டர் அளவு கோலில் 6.5 எனப்பதிவாகிய இந்த நிலநடுக்கம் கடலின் ஆழத்தில் 300 அடிக்குக் கீழே ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)

# லண்டன் குண்டுவெடிப்பு சூத்திரதாரி யார்?

லண்டன், ஏப்ரல் 22

கடந்த சனியன்று லண்டனில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் சூத்திரதாரி யார் என்பது தெரியாத நிலையில் பிரிட்டிஷ் அதிகாரிகள் குழப்பமுற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

உலக அரங்கில்

சன நெருக்கடி மிகுந்த லண்டன் கடைத்தெருவில் நிகழ்ந்த இக்குண்டு வெடிப்பினால் 39 பேர் காயமடைந்தனர். அவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

கொசோவோ விவகாரம், மத்திய கிழக்கு நெருக்கடி அல்லது வடஅயர்லாந்து கெரிலாக்கள் சம்பந்தப்பட்ட சம்பவமாக இது இருக்கக் கூடும் எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. (ஐ)

# கடாபியின் உதவிகோரும் அதிபர் மிலோசெவிக்!

ரியூனிஸ், ஏப்ரல் 22

யூகோஸ்லாவிய அதிபர் சொலபொடான் மிலோசெவிக் லிபிய அதிபர் கேணல் கடாபியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கொசோவோ நெருக்கடியைத் தீர்க்க உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

லிபிய அரச தொலைக்காட்சி இத்தகவலை வெளியிட்டது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் சகோதரப் புரட்சியாளர் என்ற வகையில் தனது எல்லா வழிகளையும் பயன்படுத்தி உலக சமாதானத்துக்கு உதவ வேண்டும் என்று மிலோசெவிக் தனது செய்தியில் கோரியுள்ளதாகத் தெரிவித்தார். (ஐ)

# புத்தர்சிலை திருடியவருக்கு மரணதண்டனை

பெய்ஜிங், ஏப்ரல் 22

கி.பி. 499 ஆம் ஆண்டைச் சேர்ந்த புத்தர் கற்சிலையை திருடியவருக்கு சீனாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டது. அதற்கு உடந்தையாக இருந்த மேலும் இருவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு, செம்மணத்தம்புலம்
# ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
# மகா கும்பாபிஷேகச் சிறப்பிதழ்

22 - 04 - 1999

## பிரதம குருக்கள் அருளாசி

புராதன சக்தி பீடங்களுள் ஒன்றான புவனேஸ்வரி பீடம் அமைந்துள்ள நயினையம் பதியின் தென்பாலுள்ள செம்மணத்தம்புலம் என்னும் பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு இன்று கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றது. இச் சிறப்பினைக் காண்போர் விரும்பிய அனைத்தும் பெறுவர். விநாயகர்பேரருள் அனைவருக்கும் கிடைப்பதாகுக.

பிரதிஷ்டா கிரியாகலாபமணி
சிவாகம கலாநிதி
**வடகோவை மு பரமசாமிக்குருக்கள்**

## அறங்காவலர் சபையின் தலைவர் தரும் செய்தி

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்"

நயினையம்பதியின் தென்பால் விளங்கும் செம்மணத்தப்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் இன்று திருக்குட முழுக்குக்காண இருப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் எம்பெருமானைப் புதுப் பொலிவுற வைப்பதற்குப் பெரும் உதவிகளைச் செய்த விநாயகர் அடியார்களுக்கு எம்பெருமான் என்றும் துணை நிற்பார்.

எம்பெருமானின் அடியார்கள் ஈழத்தின் பல பாகங்களிலும் அல்லற்பட்டுத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் எம் பெருமானின் திருக்குடமுழுக்கு சாந்தியையும், சமாதானத்தையும் பெற்று தர வேண்டுமென எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன்.

**ந விஸ்வநாதன்**
தலைவர்,
அறங்காவலர் சபை,
செம்மணத்தம்புலம்
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்,
நயினாதீவு.

### மகாகும்பாபிஷேகம் காண அயராது உழைத்த அறங்காவலர் சபையினர்

திரு ந. விசுவநாதன் (தலைவர்)
திரு சி நா. கணேசன் (செயலாளர்)
திரு. இ யோகநாதன் (பொருளாளர்)
திரு. கோ. வாமதேஷன்
திரு. இ. கனகசபை
திரு மு. மகாலிங்கம்
திரு. க மகாலிங்கசிவம்
திரு. செ. தியாகராசா
திரு சி. கிருஷ்ணசாமி
திரு ச. தருமராசா
திரு க பாலசுப்பிரமணியம்
திரு க பத்மராசா
திருமதி கோ. சரசலட்சுமி



## குடமுழுக்கு ஆடீரையா!

செம்மணத்தம் புலத்தமர்ந்து சித்திநல்கிச்
சீரகத்தைத் தருபவனே விநாயகனே!
வெம்மனத்து இருள்விலக்கி வித்தையோங்க
விக்கினங்கள் வேரறுக்க வேண்டுமையா!
எம்மினத்தின் இடர் மடிய இன்பமோங்க
ஏகதந்தா! ஏரம்பா! எழுந்துவாராய்!
கும்பமுனி அகத்தியர்க்கு அருளையீந்த
குஞ்சரனே! குடமுழுக்கு ஆடீரையா!

எத்தொழிற்கும் வித்தாகும் ஏகதந்தா!
எலியேறும் தத்துவனே! எம்மையாளும்
அத்திமுகா! ஐங்கரனே அவலந்தீர்க்கும்
அட்சரனே! அயிலவனின் சோதரனே!
சித்திபுத்தி நாயகனே இந்த நாட்டின்
சிக்கலினைத் தீர்த்திடவே எழுந்துவாராய்!
வித்தைமிகு செம்மணத்தம் புலத்துமேவும்
விநாயகனே! குடமுழுக்கு ஆடீரையா!

வித்தைவளர்! நயினைநகர் செம்மணத்தம்
வீரகத்தி விநாயகரின் குடமுழுக்கைப்
பக்தியுடன் செய்தகுரு மணிகள் வாழி!
பரிபாலித் தறங்காக்கும் சபையோர் வாழி!
எத்திசையும் இருந்துதவி செய்தோர் வாழி!
எழிலிலங்கை நாடமைதி கண்டு வாழி!
வித்தைமிகு செம்மணத்தம் புலத்துமேவும்
வீரகத்தி விநாயகரே வாழி! வாழி!!

**நயினை இராகுலன்**

**மலர் ஆக்கம்:**

**செம்மணத்தம்புலம்**
**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்**
**பஜனைச் சபை,**
**நயினாதீவு.**

## செம்மணத்தம்புலத்து வீரகத்தி விநாயகர்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
—மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது
—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான்
—பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

ஈழத் திருநாட்டின் உச்சித் திலகம் மணிபல்லவம் என சரித்திரம் போற்றும் நயினாதீவாகும். இம் மணித்தீவிலே மிகவும் அருள் நிறைந்த ஆலயங்கள் உள்ளன. தீவின் தென்பால் செம்மணத்தம்புலம் என்று அழைக்கப்படுகின்ற தலத்திலே கோயில் கொண்டு அருள்பாலிக்கும் வீரகத்திப் பெருமானுக்குரிய வரலாறு பழமை வாய்ந்தது. இந்த ஆலயத்தின்சரித்திர ரீதியான, சான்று ரீதியான வரலாறு சேகரிக்கப்பட்டு வெளியிடப்படாமை கவலைக்குரிய விடயமாகும். இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஸ்தாபிக்கப்பட்டு காலக் கிரமத்தில் வளர்ச்சி அடைந்து தற்போதைய நிலையை அடைந்துள்ளது பெருமானின் ஆலயம்.

ஆலயத்தின் அமைவிற்கு தமது உடல்; பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துத் தொண்டாற்றிய பெருமக்கள் நினைவு கூரத்தக்கவர்கள். எத்தனையோ பெரியார்கள் என்னுடைய மனக் கண்ணிலே தோன்றினாலும் ஒரு பாட்டிக்கிழவி "மோசா" என்ற செல்லப் பெயருடன் உயிர் வாழ்ந்து அந்த ஆலயத்தில் வழிபாடுசெய்த நிகழ்ச்சி இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றது. நாள் தோறும் பெருமானுடைய கோவிலுக்கு வந்து மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் அமைந்திருந்த வைரவ கோயிலின் முன்னால் நின்று அந்தப்பாட்டி மனம் குழைந்து பக்திசெய்த காட்சி இன்றும் பசுமையாக இருக்கின்றது. அவரைப்போல் அந்தக் கோவிலில் என்னுடைய தாயார், தந்தையார் உள்ளிட்ட எத்தனையோ அடியவர்கள் வணங்கி பக்திநெறி பரப்பியுள்ளனர். அவர்களில் சுவாமி வேலாயுதர் என்று அழைக்கப்பட்ட க. வேலாயுதபிள்ளை போன்ற இன்னும் பலபெருமக்கள் அங்கே வழிபாடு செய்தவர்களில் சிலர்.

**எஸ்.ஏ.ஈ. ஏகநாதன்**
மேலதிகமாவட்ட நீதிபதி நீதிவான்
யாழ்ப்பாணம்) ஊர்காவற்றுறை

இந்த ஆலயம் பற்றி சரித்திர ரீதியான வரலாற்றைத் தகுந்த ஆதாரங்களுடன்சேர்த்து அறங்காவலர் சபை வெளியிடவேண்டும் என்று பக்தி தழுவிய அன்புடன் வேண்டுகின்றேன்.

22-4-1999 அன்று நிகழவிருக்கும் மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேற வேண்டும் என்றும் எம்பெருமானுடைய திருவருள் நயினை மக்கள் எங்கே இருந்தாலும் அவர்களைக் காக்கவேண்டும் என்றும்இதயத்தாமரையைச் சமர்ப்பித்துப் பிரார்த்திக்கின்றேன்.

## விநாயகரின் குடமுழுக்கு அனைவர்க்கும் திருமுழுக்கு

அருள்நயினைதென்திசையில் செம்மணத்தம்புலத்துறையும்
திருநிறைந்த வீரகத்தி விநாயகர்க்குக் குடமுழுக்கு(ப்)
பெருஞ்சாந்தி நடைபெறுதல் பேரின்பம் தந்திடுமே
உருவோடு திருவேறி ஊர்செழிக்கப் போற்றுவமே.
விக்கினங்கள் தீர்க்கின்ற விநாயகரை வழிபட்டால்
தக்கபெரு நல்வாழ்வும் தகைமைகளும் உயர்வுறுமே.
பக்குவமாய்(ப்) பயபக்தி பண்ணிவிட்டால் ஆனைமுகன்
எக்கணமும் எம்மோடு இருந்து புகழ் சேர்த்திடுவான்
நம்பிக்கை கூப்பிநின்று நாம் அவனைச் சரணடைந்தால்
தும்பிக்கை தோன்றிமுனே தூக்கியெமைக் காப்பாற்றும்
ஞானமுதல் நாயகனை நம்பினோர் கெட்டதில்லை.
தேனமுத மாய்வந்து சித்தியெலாம் தந்திடுவான்.
ஆனதனால் குடமுழுக்கு அனைவர்க்கும் திருமுழுக்கு
காணவரும் அன்பர்க்கெலாம் கண்களிக்கும் அருள்முழுக்கு

**நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை**


## மகா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்:

| | | | |
|---|---|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை<br>4ஏ, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம் | சுமங்கலி ஜுவல்ஸ்<br>118ஏ, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | சிவம் வெற்றிலை வியாபாரம்<br>வைரவர் கோயிலடி,<br>யாழ்ப்பாணம். | விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்<br>வட்டார இல. 06, நயினாதீவு.<br>35, மில்றோட், வவுனியா. |
| ஸ்ரீ கணேச<br>சனசமூக நிலையம்<br>நயினாதீவு | அம்பிகை<br>வாணிப நிலையம்<br>வட்டார இல. 01, நயினாதீவு. | மாணிக்கவாசகர்<br>டிறேற் சென்ரர்<br>வட்டார இல. 06, நயினாதீவு. | பத்மா ஸ்ரோர்ஸ்<br>பத்மா மினி, பத்மா போட்டோ<br>வட்டார இல. 06, நயினாதீவு. |
| வாமதாஸ் களஞ்சியம்<br>வட்டார இல. 04, நயினாதீவு | வாகீசன் வாணிப நிலையம்<br>வட்டார இல. 01, நயினாதீவு. | வித்தியா ஸ்ரோர்ஸ்<br>வட்டார இல. 07, நயினாதீவு. | சு. கு. களஞ்சியம்<br>வட்டார இல. 03, நயினாதீவு. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



மலர்வு 21 — 02 — 1919

உதிர்வு 24 — 03 — 1999

திருமதி

## தங்கமுத்து கந்தையா

அன்பின் திருவுருவாய் அணையா
ஒளி விளக்காயிருந்து எமக்கு வழி
காட்டிய முன்னறி தெய்வமே!'

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

- குடும்பத்தினர்.

24–03–1999 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் சபீண்டிகரண ஆத்ம சாந்திக் கிரியைகள் 24–04–1999 சனிக்கிழமை பகல் 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து, மதிய போசனத்திலும் பங்கு பற்றும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தின் சார்பாக
வே. க கந்தையா

''அன்னை இல்லம்''
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

(சி/7251)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னத்துரை சுந்தரலிங்கம்

[யாழ் மெட்டல், நியூலங்கா அலுமினியம் இண்டஸ்ரீஸ் ஆகியவற்றின் முன்னாள் உலோக வேலையாளரும், ஆலோசகரும் ]

தோற்றம்: 1944 11 – 14

மறைவு: 1999 – 03 – 23

அன்பாலும் பண்பாலும் அரவணைத்த
எம் தெய்வமே!
கலங்கியே நிற்கின்றோம்.
உம் ஆத்மா சாந்தி பெற
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி சாந்தி

இன்று எமதில்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியையிலும், அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவியும், (பவளராணி)
பிள்ளைகளும்,
மாமியார் திருமதி க. சிவயோகம்
(யோகம்மா) குடும்பம்.

31/8, இராமநாதன் வீதி,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

[ 65030 ]

# கூட்டுறவு தொடர்பான விரிவுரை

அரியாலை, ஏப்ரல் 22

கூட்டுறவுப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளின் வசதி கருதி கூட்டுறவு தொடர்பான விரிவுரைகள் இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் யாழ். மத்திய கல்லூரியில் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவுள்ளன.

கூட்டுறவுத் திணைக்களமும், கூட்டுறவுச் சபையும் இணைந்து இந்த இலவச விரிவுரைகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளன. (ஐ-17)

# பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

உடல் முழுவதிலும் தீப்பற்றி எரிந்து ஆபத்தான நிலையில் கடந்த 16 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் நான்கு நாள்களின் பின் கடந்த திங்களன்று அங்கு மரணமானார்.

நெல்லியடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்லம்மா [வயது 55] என்பவரே உயிரிழந்தவராவார். (உ-15-139)

# கட்டடம் திறந்துவைப்பு

கொழும்புத்துறை, ஏப்ரல் 22

அகதிகளுக்கான ஐ நா தூதரக நிதியுதவியுடன்புனரமைப்புச் செய்யப்பட்ட தொல்புரம் பாணாவெட்டி அரசினர் வைத்தியசாலைக் கட்டடம் அண்மையில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. (க-30)

# நேர்முகப் பரீட்சை

வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட வரிமேற்பார்வையாளர் பதவி வெற்றிடத்திற்கான ஆள் நிரப்பும் நேர்முகப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலியில் உள்ள பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும் என்று செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை– சுகாததார தொழிலாளர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர் வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

# கப்பலில் ஒயில் வந்தது

அரியாலை, ஏப்ரல் 22

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய நிலையத்துக்கு ஒயில் வகைகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த ஒயில் வகைகள் மாவட்டத்தில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஒயில் விநியோகம் மேற்கொள்ளப்படுவதை அடுத்து ஒயிலுக்கு நிலவிய தட்டுப்பாடு நீங்கியுள்ளது. (ஐ-17)

# சிகரெட் தீயினால் வேலி எரிந்தது

புன்னாலைக்கட்டுவன், ஏப்ரல் 22

உடுவில் அம்பலவாணர் வீதியில் சுவாமிநாதன் கடைக்கு அருகில் உள்ள வீட்டு வேலி வழிப்போக்கர் ஒருவர் புகைத்து விட்டு எறிந்த சிகரெட்டினால் தீப்பிடித்து எரிந்தது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்றது.

வீட்டுச்சொந்தக்காரர்தண்ணீர் ஊற்றி தீயை அணைத்த போதும் வேலியின் ஒரு பகுதி முழுமையாக எரிந்து சாம்பராகியது. (ஐ-133)

# நகரச் சந்தைகளில் மீன் விலை வீழ்ச்சி

அரியாலை, ஏப்ரல் 22

யாழ். நகரில் மீனின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

பாஷையூர், குருநகர், கொட்டடி மீன்சந்தைகளில் கடந்த சில நாள்களாக பாரை, விளை போன்ற மீன் வகைகள் அதிகளவு வந்து சேர்வதால் விலை குறைந்து காணப்பட்டது.

தற்போது வீசும் பருவக் காற்றினாலேயே மீன் அதிகளவில் கரையோரப் பகுதிகளுக்கு வருவதாக மீனவர்கள் கூறுகின்றனர். (ஐ-17)


# T.P. இயக்குநர் தேவை

தனியார் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றிற்கு ஆங்கிலம், சிங்களம் ஓரளவு தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிலுள்ளவர்களும், தொலைத்தொடர்பில் முன் அனுபவமுள்ளவர்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு: விளம்பரதாரர் இல. 874
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(65040)

# தேவை

புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண்களும், புடவை வியாபாரம் பழக விரும்பும் ஆண்களும் நேரில் வரவும்.

சங்கரப்பிள்ளை & சன்ஸ்
21, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(65042)


# கண்ணீர் அஞ்சலி

ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டு
காணா இடம் சென்ற
அமரர்

## இரத்தினம் புனிதராசா

(செல்வராசா)


(நிர்வாகி, எழுகதிர் விற்பனை நிலையம் — சாவகச்சேரி)

அவர்களின் திடீர் மறைவினால் வேதனையுறும் நாம், பொன், பொருள் கொடுத்தும் பெறமுடியாத இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி. சிவநாதன்
விநாயகர் களஞ்சியம்,
முகமாலை.

(சி/7253)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 03 — 10 — 1937

உதிர்வு 24 — 03 — 1999

அமரர்

## மார்க்கண்டு பரமசாமி

24 – 03 – 1999 அன்று காலமான எனது சகோதரனின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், அந்தியேட்டிக் கிரியைகளும் 23 – 04 – 1999 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் அன்று நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

மா. மாணிக்கம்
( சகோதரன் )

கி. உ. அலுவலகம்,
(மட்டுவில் மத்தி)
மழீல் வீதி

(65014)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடற்றொழில் சமாசத்தின்

# ஐஸ்கட்டி தயாரிக்கும் பணி அடுத்த வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22
வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் ஐஸ்கட்டி தயாரிக்கும் பணியை மீண்டும் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கவுள்ளது.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தினால் (யு. என். டி. பி) இந்த வார முற்பகுதியில் அன்பளிப்பாக வழங்கப்பட்ட—ரூபா 19 இலட்சம் பெறுமதியான—ஐஸ்கட்டி தயாரிக்கும் இயந்திரம் மூலமே மேற்படி பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இதன் மூலம் நாளொன்றுக்குச் சுமார் 18 கிலோ கொண்ட தனித்தனியான 48 ஐஸ்கட்டிகள் உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும் எனவும்—

ஐஸ்கட்டி உற்பத்தி ஆரம்பமானதும் கடலுணவுப் பொருள்களைப் பழுதடையாது தூர இடங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடியதாக இருக்கும். எனவும்—

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் சி. தவரெட்ணம் தெரிவித்தார்.

மேற்படி ஐஸ் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுவதற்கென வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 5 பெண் ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-7)

## நூல்கள் அன்பளிப்பு

கோண்டாவில், ஏப்ரல் 22
இடம்பெயர்ந்து உரும்பிராயில் இயங்கிவரும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய நூலகத்திற்குப் பெற்றோர்களும் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினரும் இணைந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

(க-ரி)

## தொலைபேசி இணைப்பு

வலி. தென்மேற்கு ஏப்ரல் 22
வலி. தென்மேற்கு பிரதேச சபை அலுவலகத்துக்கு விரைவில் தொலைபேசி இணைப்பு வழங்கப்படவுள்ளது.

இதற்கானநடவடிக்கையை யாழ். ரெலிக்கொம் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

(க-185)

## அதிபர் தரம் உயர்வுக்கு விண்ணப்பிக்க கோரிக்கை

திறமை, சேவை மூப்பு அடிப்படையில் அதிபர் சேவை தரம் II இல் உள்ளவர்களை தரம் I க்கு பதவி உயர்த்தவும், தரம் III இல் உள்ளவர்களை தரம் II -கு பதவி உயர்த்தவும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவி உயர்வுகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கல்விச் சேவைக் குழு கோரியுள்ளது.

இது தொடர்பான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 16 ஆம் திகதியே வெளிவந்துள்ளது என்றும் —

இந்தப பதவிக்கு விணப்பிக்கப் போதிய அவகாசம் இல்லாததால் விண்ணப்ப திகதியை நீடிக்க வேண்டும் என்றும் —

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொது செயலாளர் த. மகாசிவம் கல்விச் சேவைக்குழுவின் பதில் செயலாளர் எஸ். ஏ பிரேமரத்தினவிடம் கோரியுள்ளார்.

[ஐ-3]

# கல்வியில் ஊக்கமின்றி இடைவிலகும் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கிறது

## அக்கறை உண்டாக்கி சீராக்க வேண்டும்

நெல்லியடி, ஏப்ரல் 22
கல்வியில் ஊக்கமின்றி பாடசாலையிலிருந்து இடையில் விலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது இடம் பெயர்வு, மீளக் குடியமர்வு போன்றவற்றினால் மாணவர்கள் பாடசாலை நாட்களில் பலவற்றை இழந்துள்ளனர் இதனால் வறுமையும் கூடியது கல்வியில் அக்கறை கொள்ளாதோர் எண்ணிக்கையும் அதிகரித்ததனால் எமது சமூகம் கல்வியில் வீழ்ச்சி அடைந்தது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயவளவில் ஆசிரியர் பயிற்சி நிலையக் கட்டடத்தை உண்மையில் திறந்து வைத்துப்பேசிய வடக்கு—கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க கந்தசாமி இவ்வாறு தெரிவித்தார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் சி சிற்றம்பலம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

கல்விப் பணிப்பாளர் மேலும் பேசியபோது:

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 18 ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும், இங்கு ஆசிரியர்கள், அதிபர்கள் பற்றாக்குறை நிலவி வருகின்றது, யாழ். மாவட்டத்தில், வரணி, மானிப்பாய், நெல்லியடி ஆகிய மூன்று இடங்களிலும் ஆசிரிய பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், முதலில் கட்டடத்தைக்கட்டி முடித்த பெருமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபரையே சாரும்.

மாணவரின் கல்வி நிலை அழிந்துசெல்கின்றது. இடிந்த சட்டடத்தைத் திருத்தலாம் ஆனால், இழந்த மனதையும் இழந்த கல்வியையும் மீளப் பெறுவது கஷ்டம். கல்வியில் மாணவர்கள் அக்கறைகொள்ளும் விடயத்தில் மாணவரின் கல்வியை வளர்க்கும் முறையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு விளங்குமிடத்திலிருந்து வயதுக்கு ஏற்றநிலையில் கல்வியை ஊட்டவேண்டும். கல்விச் சீர்திருத்தத்தில் அதிபர்கள் மிகப்பொறுப்பாக இருக்க வேண்டும், கல்விப்பாடத்திட்டம் மாற்றங்களைச் செய்கிறது.

பளைப் பகுதியில் அரைவாசிப்பிள்ளைகள் ஒரு வருடமும், இரு வருடங்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை.

250 மாணவர்களையும் சரியான நிலைக்கு கொண்டு வர ஒவ்வொரு பிள்ளைகளும் வளர்ச்சியடைவார்கள், 10 வயதுப் பிள்ளையை 13 வயதுப் பிள்ளையுடன் 5 ஆம் ஆண்டில் இணைத்தால் பெரும் சீரழிவு உருவாகும். மன உளர்ச்சி ஏற்படும் பிள்ளைகளைக் கட்டி வளர்ப்பது கல்வி, புதிய கல்விச் சீர்திருத்தம் மூலம் கல்வி, பொருளாதார அபிவிருத்திகள் உருவாக கல்வித் திருத்தம் ஏற்பட வேண்டும்.

ஆசிரியர்கள் தாம் படித்ததை, பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள். ஆனால் பிள்ளைகளுக்கு விளங்காததை அவர்கள் சொல்லிக்கொடுக்கமாட்டார்கள். படிக்க வேண்டியதன் பொறுப்பை பிள்ளைகளிடம் உணரவைத்தால், அவர்கள் தாமாகவே படிப்பார்கள். படிக்கும் பொறுப்பை கையளிப்பது ஆசிரியர்களின் கடமையாகும்.

செயற்பாடுகள் அனைத்தையும் ஆசிரியர்கள் உணரவேண்டும், எம்மிடையே ... பழக்கம் நிறைய ... சயம் நாம், மற்றவரை அதே கலாசாரத்தோடு ஏற்றுக்கொள்ளவேண்டும் இல்லாவிடில் குடும்பமாக, சமூகமாக வாழமுடியாது, மனப்பாங்கை வளர்க்க புதிய பாடத்திட்டம் வழிவகுக்கும்.

இந்தியாவிலுள்ள உத்தர பிரதேசத்தில் சாதிப்பாகுபாடு காரணமாக, 30 சதவீதமான மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை ஆப்கானிஸ்தானில் புத்தகங்களை சுமந்துகொண்டு மாணவிகள் பாடசாலைக்குச் செல்லமுடியாது எமக்கு கல்வி என்ற கோஷம் வர வேண்டும். நடைமுறையில் உள்ள பாரபட்சம் என்ன? அங்கக் குறைபாடு உள்ள மாணவர்களைப் படிக்கும் வாய்ப்பு, வாழ்க்கையில் மதிப்பு ஏற்படுத்த வகுப்பறையில் எந்தவகையான பாரபட்சமும் காட்டக்கூடாது. எமது சமூகக் கட்டுப்பாட்டு முறையில் அது தொனிக்கும். அதனை அகற்றவேண்டும்.

தற்பொழுது உள்ள பாடவிதான மாற்றம் பிள்ளைகளுக்குகல்விச் சுதந்திரத்தைக் கொடுத்து, மாற்றத்தை ஏற்படுத்தும். இதனை நடைமுறைப்படுத்துவது சிரமம். மிகப் பொறுப்பானவேலை. 800 பிள்ளைகளும் எமது பிள்ளைகள் என்று உணர வேண்டும் இப்படி அவர் கூறினார்.

திறப்பு விழா வைபவத்தில் வடமராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜா, உதவிக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரட்ணம், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான, வி அருளானந்தம், ஆ. இராஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(இ-109)

## வாசகர் திருமுகம்

### தரம் உயர்த்தப்படாதது ஏன்?

யாழ். மாவட்டத்தில் அரசின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதிகளில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தரம் உயர்த்தப்பட்டு பிரதேச செயலகங்களாக செயற்படுகின்றன. ஆனால் பல ஆண்டுகளாக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப்பகுதி, வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மட்டும் தரம் உயர்த்தி பிரதேச செயலகங்களாக இயங்க இன்னும் வசதிசெய்யப்படவில்லை. அரசாங்க அதிபரோ அல்லது ஏனைய அரசியலாளர்களோ வேண்டுமென்று இதனைத் தடுத்து வருகின்றனரா? அவ்வாறாயின் அதற்குக் காரணம் என்ன?

அங்கு போதிய வசதிகள் இல்லையா? உத்தியோகத்தர்கள் இல்லையா? அரசாங்கம் இந்த வருடம் — 1999 ஆம் ஆண்டு — முதல் எல்லா உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் பிரதேச செயலகங்களாக மாற்றுவதாகக் கூறிய போதிலும் அதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அரச அதிபரும் வாளாவிருக்கிறார். அவரே இதற்கு விளக்கம் தரவேண்டும்?

சி. பொன்னம்பலம்.

காரைநகர்.

### சித்திர குப்த விரதம் எப்போது?

சித்திரை மாதத்தில் வரும் சித்திர குப்த விரத தினம் பற்றிப் பஞ்சாங்கங்கள் மாறுபட்டுள்ளன திருக்கணித பஞ்சாங்கத்தில் 29 - 4 - 99 வியாழக்கிழமை எனவும், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் 30 - 4 - 99 வெள்ளிக்கிழமை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

சித்திரை மாதத்தில் இரண்டு தினங்கள் முக்கியமானவை. சித்திரகுப்த நாயனார் பிறந்ததினம், சித்திராபூரணை விரததினம் ஆகியவையே அவையாகும்.

இந்த இரண்டும் வெவ்வேறு அலகுகளைக் கொண்டு நிர்ணயிக்கப்படுபவை. சித்திரை நட்சத்திரம் சித்திரகுப்த நாயனாரின் பிறந்ததினம் பூரணை தாயை இழந்தவர்கள் விரதம் அனுஷ்டிக்கும் தினம் இவை இரண்டும் அநேகமாக ஒரேநாளில் வருவதுண்டு. இதனால் இரண்டும் ஒன்றாக அனுஷ்டிக்கப்பட்டன.

இந்த ஆண்டு சித்திரை நட்சத்திரம் 29 - 4 - 99 இலும் பூரணை 30 - 4 - 99 இலும் வருகின்றன. இதன்படி சித்திர குப்த விரதம் முதல்நாளும் பூரணை விரதம் மறுநாளும் அனுஷ்டிக்கப்படுவதே முறையானதாகும்.

ஆனால் வாக்கிய பஞ்சாங்கத்தில் 29 - 4 - 99 இல் சித்திரைச் சித்திரை எனக் குறிப்பிட்டு, 29 - 4 - 99 இல் சித்திர குப்த விரதம் எனக் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டாக்கி உள்ளது.

சித்திர குப்த விரதமும், கஞ்சி வார்த்தல், அன்னதானம் ஆகியவையும் 29 - 4 - 99 வியாழக்கிழமையும், பூரணை விரத அனுஷ்டானம் 30 - 4 - 99 வெள்ளிக்கிழமையும் கைக்கொள்ளப்படுதலே ஏற்புடையதாக இருக்கும் எனக் கருதுகிறேன் மக்களுக்கு இது குறித்து விளக்கம் தேவை.

கு. சி. சுந்தரம்பிள்ளை

உரும்பிராய்.

### பொருத்தமானது இதுவே!

கடந்த ஞாயிற்றுக்கிழமை (18-4-99 ஆம் திகதி) காலை 7 மணிக்கு இலங்கை வானொலியில் ''வாரம் ஒரு வலம்'' நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்க் கட்சிகள், குழுக்கள் அத்தனையும் தனித்தனியே இயங்கி இதுவரை கண்டதொன்றும் இல்லை. எனவே அத்தனை குழுக்களும் ஒன்றுசேர்ந்து ஐக்கிய கூட்டணியாகத் தொழிற்பட வேண்டும் என்ற பொருள்பட அதில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். மகிழ்ச்சி.

அப்படி இவர்கள் ஒன்றுபடும் வேளையில் பிறிதொரு மூலையில் யாரோ செலவில் ஒரு கட்சி உதயமாகி விடக்கூடும். அப்படி ஒன்றும் வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

மேற்குலகில், கனவான் ஒருவன் போரிட்டு தனது நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவுடன், கலப்பை ஒன்றுடன், ஒரு பிடி தானியத்தை எடுத்துக் கொண்டு காட்டுவழியேகினான் என்று சரித்திரம் கூறுகின்றது.

எனவே இப்போதுள்ள கட்சிகள் எம்நாட்டிற்கு இற்றைவரை தாமொன்றும் செய்ததில்லை என்று மானசீகமாக ஒப்புக்கொண்டு, மிக மிகப் பெருந்தன்மையுடன் ஒப்புக்கொண்டு, கலப்பை ஒன்றுடன் வயலுக்குச் செல்லுங்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன். நாடாளுமன்ற ஊதியம் பெறாதீர்கள். அரசியல் பேசாதீர்கள். இதைச்செய்ய ஒன்றுபடுங்கள்.

நாடாளுமன்றத் தெரிவென்றால் மனுப்போடுங்கள். மக்கள் உங்களைக் கண்டிப்பாக ஆதரிப்பார்கள்.

செ. பாலசுந்தரம்

திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வெறுப்பைத் தேடும் செயல்

குடாக்கடல் ஊடாக வன்னியில் இருந்து வந்து சேர்ந்த ஐந்நூறுக்கும் மேற்பட்ட அகதிகள் இரண்டு வாரங்களாக குருநகரில் உள்ள சீநோர் இடைத்தங்கல் முகாமில் காத்திருக்க நேர்ந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் தொடர்பான விசாரணைகள் மந்தகதியில் நடைபெற்று வருவதும், அந்தந்தப் பகுதிக் கிராம சேவகர்கள் இவர்களைப் பொறுப்பேற்றுச் செல்வதில் உள்ள தாமதமுமே இந்த நிலைக்குக் காரணங்கள் என்று கூறப்படுகிறது.

குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பகுதியில் தங்கியுள்ள மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி, மீளக்குடியேற வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் விருப்பம். இதனை அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் அடிக்கடி கூறி வந்துள்ளார்கள்.

வன்னியில் இடம் பெயர்ந்து தங்கியுள்ள குடாநாட்டு மக்கள் வவுனியாவுக்குவந்தால், அவர்களைத் திருமலைக்கு அழைத்துச் சென்று கப்பல் மூலமாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்யமுடியும் என்று அரசாங்கம் 1996 ஒக்ரோபரில் அறிவித்திருந்தது.

அந்த வசதியைப் பயன்படுத்தி ஆரம்பத்தில் கணிசமான எண்ணிக்கையில் அகதிகள் இங்கு வந்தனர். ஆனால் திருகோணமலை-காங்கேசன் கப்பல்சேவை இப்போது கழுதைதேய்ந்து கட்டெறும்பான நிலையாகி விட்டது

குடாக்கடல் ஊடாக வருவது ஓரளவுக்கேனும் இலகுவான, குறுகிய நேரப் பயணமாகையால் அகதிகள் அதனூடாகவும் இங்கு வர ஆரம்பித்தனர். அரசும் அதனை ஏற்றுக்கொள்வதுபோல, சீநோர் இடைத்தங்கல் முகாமை உண்டாக்கியது வன்னியிலிருந்து வருவோரை அங்கு தங்க வைத்து, பாதுகாப்புத் தொடர்பான விசாரணைகளை நடத்தி, அவரவர் முன்னர் வாழ்ந்த பகுதியின் கிராம சேவையாளர் பொறுப்பேற்றுச் செல்ல வசதி செய்யப்பட்டது.

இடைத் தங்கல் முகாம் உண்டாக்கப்பட்ட ஆரம்பத்தில் குடாக்கடல் ஊடாக வருவோர் மூன்று நான்கு நாள்களிலேயே தமது வீடுகளுக்குச் செல்லக் கூடியதாக இருந்தது. ஆனால் இப்போது இரண்டு வாரங்களாகியும் இடைத்தங்கல் முகாமை விட்டு வீட்டுக்குச் செல்ல முடியாதிருக்கிறது.

எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்துவிட்டு, தமது சொந்த இடத்துக்கு வந்து விடவேண்டும் என்ற ஆவலுடன் இங்கு வந்து சேர்வோரை விசாரணை செய்வது என்ற பெயரில் நீண்ட நாள்களுக்குக் காத்திருக்க வைப்பது எந்தவகையிலும் எக்காரணம் சொன்னாலும் நியாயமாகாது.

அகதிகள் தமது சொந்த இடங்களுக்கு இயன்றளவு விரைவில் சென்று மீளக் குடியேற வசதி செய்ய நடவடிக்கை மேற்கொள்வது அவசியம். இல்லையேல் தமிழ் மக்களுக்கு மேலும் ஒரு தொல்லை கொடுத்து, அரசு அவர்களின் வெறுப்பைத் தேடிக் கொள்வதாகவே முடியும்.

# பல இலக்குகளைக் கொண்டதான நில ஆக்கிரமிப்புத் திட்டமே இது!

**மாவை. சோ. சேனாதிராசா**

வலிகாமம் வடக்கு, வலி. கிழக்கு (வளலாய்) பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட அகதிகளின் பின்வரும் விவரங்களின் படிவங்கள் மூலம் காட்டப்படுகின்றன.

(அ) அதி உயர் (HSZ) பாதுகாப்பு வலயத்துள் வரும் மீளக்குடியமர அனுமதிக்கப்படாதவர்களின் வீடு, காணி அளவு, சொத்து அவற்றின் பெறுமதி விவரங்கள்.

(ஆ) பாதுகாப்பு முன்னணி (FDL) அரங்குக்குள் வரும் மீளக்குடியமர அனுமதிக்கப்படாதவர்களின் வீடு, காணி, சொத்து அவற்றின் பெறுமதி விவரங்கள்.

(இ) படைகள். காவல் துறையினரால் (occupied) கையகப்படுத்தப்பட்ட வீடு. சொத்துக்களின் பெறுமதி விவரங்கள்.

## திருமலைக்குப் பின் யாழ்ப்பாணமா?

(ஈ) அதி உயர் பாதுகாப்பு வலயம், பாதுகாப்பு முன்னணி அரண் ஆகிய பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் மீளக் குடியமர அனுமதிக்கப்படாதவர்களின் வீடு. சொத்து காணி பெறுமதி விவரங்கள்.

அரசின் இப் படிவங்கள் மூலம் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத குடும்பங்களுக்கு - காணிகளுக்கு நட்டஈடு வழங்க முயற்சி எடுக்கப்படுகிறது என்பதும்—

மிக முக்கியமாக நட்டஈடு வழங்குவதன் மூலம் தங்களின் வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழ்க் குடும்பங்கள் தங்கள் வாழ்விடங்களில் மீளக் குடியமர்த்தப்படமாட்டார்கள் என்பதும்—

நட்டஈடு வழங்க உத்தேசிக்கப்படும் தமிழ் மக்களின் நிலங்களை அரசு இராணுவத் தேவைகளுக்கு ஏற்கனவே ஆக்கிரமித்து வைத்துள்ளது என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இது ஒரு நீண்டகாலத் தேவைக்கான நிரந்தர நில ஆக்கிரமிப்புக் கொள்கைத் திட்டமே தான்.

### ஆண்டாண்டு காலமாகத் தேடியவை

இவ் விவரப் படிவங்களில் கையொப்பமிட வைப்பதானது அரசின் வஞ்சகத்தனமான செயலாகும். யாழ் வலி - வடக்குப் [illegible] தில் 75% வீடுகள் சொத்துக்கள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன. நம் மூதாதையர்கள், அடுத்த சந்ததியினர் ஆண்டாண்டுகாலமாக தங்கள் உழைப்பால் தேடிய சொத்துக்கள், கட்டிய வீடுகள் போர் நடவடிக்கைகள் இன்றியே இராணுவத்தின் பாதுகாப்புப் பிரதேசம் என்ற பெயரில் அழிக்கப்பட்டன; அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

உதாரணமாக மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு 100 மீற்றர் எதிரில் காங்கேசன்துறை பிரதான வீதியோரத்தில் அமைந்திருந்த எமது வீடு 1985 இல் சாதாரணமான ஒரு நிலையில் இராணுவத்தினால் குண்டு வீசித் தகர்த்து தரைமட்டமாக்கப்பட்டது; பக்கத்தில் எனது அக்கா ஒருவரின்வீட்டு மேல் மாடியிலிருந்து இராணுவத்தினர் பார்க்கும்போது

> **வலி. வடக்கு காணி சுவீகரிப்பு (பகுதி: 2)**

தடையேதும்இருக்கக் கூடாது என்பதைத் தவிர அந்த வீட்டைத் தரைமட்டமாக்கவேறு எந்தக் காரணமுமிருக்கவில்லை. இவ்வாறு வலி. வடக்குப் பிரதேசத்தில் மட்டும் 75% வீடுகள் உடைமைகள் அழிக்கப்பட்டன.

இவ்வாறு இராணுவத்தினரால் அழிக்கப்பட்ட வீடுகளினதும், வீட்டுத்தளபாடங்களினதும் பெறுமதி மேலெழுந்த மதிப்பீட்டில் ஒரு லட்சம் ரூபாவிலிருந்து பத்து லட்சம் ரூபாவரை இருக்கும். நிலங்களும், ஏனைய சொத்துக்களும் பல லட்சம் பெறுமதிவாய்ந்தவை. ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் இலகுவாக அழிக்கப்பட்டுவிட்டன.

யாழ். வலி—வடக்குப் பிரதேசமான 58.5 சதுர கிலோ மீற்றர் அல்லது 14455.35 ஏக்கர் நிலப்பரப்பில் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் (High Security Zone) பிரகடனம் செய்துள்ள நிலப்பரப்பு 39.0 சதுர கிலோ மிற்றர் அல்லது 96370 ஏக்கர் எனலாம். மிகுதி பாதுகாப்பு முன்னணி அரண் (Forward Security Defence Line) ஆகும்.

இன்னும் பலாலி நிலையத்துக்கு கிழக்கே வலி—கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் வரும் வளலாய்ப் பிரதேசத்தில் 247 ஏக்கர் (வளலாய் மேற்கு, வடக்குப் பிரிவுகளில் வரும்) அப்பகுதி மக்கள் மீளக்குடியமர இராணுவத்தால் அனுமதியளிக்கப்படவில்லை. அப்பகுதியும் அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் வருகின்றது. மேலும் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை, புற்றுநோய்ப் பகுதி என்பனவும் மக்களுக்குப்பயன்படாமல் பாதுகாப்பு வலயத்துள் மூடப்பட்டுள்ளது.

### மதிப்பு என்ன?

முதலில் இலங்கை இராணுவ கொள்கை வகுப்பாளர் நோக்கிலும்சிங்கள பௌத்த பேரினவாத அறிவுசக்திகளினதும் நோக்கிலும் அவர்கள் இலக்குகளைப் பார்ப்போம்.

1. இந்தியாவின்சேது சமுத்திரத்திட்டம் நிறைவேறுமானால் தென்பகுதித் துறைமுகங்கள்—கொழும்புத் துறைமுகம்— வீழ்ச்சியுறும் — காங்கேசன்துறையில் அமையக்கூடிய காங்கேசன் துறைமுகம் வர்த்தகரீதியில் முக்கியத்துவம் பெறும். சர்வதேச இராணுவ (International Military Strategic Point) தந்திரோபாய மையமாக கிழக்கில் திருகோணமலை விளங்குவதற்கு அடுத்தபடியாக வடக்கில காங்கேசன்துறை விளங்கும். பாக்குநீரிணை (Palk Strait) மன்னார் வளைகுடா (Gulf of Mannar) முக்கியத்துவம் பெறும். பொருளாதார வர்த்தக மையங்கள் உருவாகும். வடக்கு மக்கள் வாழ்க்கைத்தரம் உயரும்.

(அ) திருமலையில் இரண்டாவது உலகப்போரில் பிரிட்டிஷ் இராணுவத் தேவைகளுக்குப் பாவித்த எண்ணெய்த் தாங்கிகளை (Trinco Oil Farms) 1980களில் அன்றைய அரசு இந்திய நலனுக்கு எதிராகமேற்கத்திய வல்லரசசக்திகளுக்கு இரகசியமாக ஏலம் விட்டதைப் போன்றும்—

1977, 1983, இனக்கலவரங்களைத் திருகோணமலையில் உருவாக்குவதில் பின்னணியில் அரசும் இராணுவமும் கடற்படையும் பிரதான பங்காற்றி தமிழ் மக்களை வெளியேற்றும் இனசுத்திகரிப்பு முயற்சி இடம்பெற்றதுபோன்றும், திருகோணமலை கோணேஸ்வரர்பூமியை இராணுவத் தளமாக்கி மிகப் பெரிய புத்தர் சிலையை முன்னிறுத்தியதைப் போன்றும், திருகோணமலை டொக்யாட் கடற்படைத் தளவிருத்திக்காக உவர்மலைப் பிரதேசத்தில் விமானப்படை— இராணுவக் குடியிருப்புக்களை நிறுவுவதற்கு முயற்சித்ததைப் போன்றும்—

ஆ) முல்லைத்தீவு – நெடுங்கேணிப் பிரதேசத்தில் மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தின் ''எல்'' பிரிவு 1983 இல் உருவாக்கப்பட்டு இராணுவப் பாதுகாப்புடன் 40, 000 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றும் எண்ணத்துடன் முல்லைத்தீவுப் பிரதேசத்தின் செம்மலை, நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், குமுளமுனையைச் சேர்ந்த பாரம்பரிய வாழ்விடங்களைக் கொண்ட 15, 000 தமிழ்க் குடும்பங்களை 1984 இல் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இரவோடிரவாக இராணுவத்தைக் கொண்டு வெளியேற்றி வரலாற்றில் மணலாறு என்று பெயர்பெற்ற நிலப் பிரதேசத்தை வெலிஓய, (Weli Oya) எனப் பெயர் மாற்றி நில ஆக்கிரமிப்புச் செய்ததைப் போன்றும் —

இ) பலஸ்தீனப் பிரதேசத்தில இஸ்ரேலிய ''கிபுட்'' திட்டங்கள் போன்று (இராணுவக் குடியிருப்புக்களும், இஸ்ரேலிய மக்கள் குடியேற்றங்களும்) நிலத் தொடர்ச்சியை (Destroy the Geographical Contiguity) முறிப்பதற்கும், பாரம்பரிய பிரதேச இனப்பலத்தைப் பலவீனப்படுத்துவதற்குமான திட்டம் போன்று, அன்றையஇலங்கை அரசு—இஸ்ரேலிய உளவுத்துறை தீட்டிய திட்டங்களினடிப்படையில், தந்தை செல்வநாயகத்தினால் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் வடக்கு—கிழக்கு மாகாணம் எனும் தமிழ்த் தேசிய இனத்துவத்தின் அடிப்படையைத் தகர்ப்பதற்காகவும் கிழக்கு மாகாணத்தை வடக்கிலிருந்து தனிமைப் படுத்துவதற்காகவும் கிழக்கே அம்பாறையிலும், திருகோணமலையிலும் வடக்கே பதவியாவிலும், முல்லைத்தீவிலும் இராணுவக் குடியிருப்புக்களையும் சிங்களக் குடியேற்றங்களையும் ஏற்படுத்தியது போன்றும்—

### முன்னெச்சரிக்கை வேண்டும்

இலங்கையின் வடபகுதியில் காங்கேசன்துறையை மையமாகக்கொண்டு தீவுப் பகுதிகளை மற்றும் காரைநகர்—மாதகல்—காங்கேசன்துறை—

(9 ஆம் பக்கம் பார்க்க)

## சாயி சிந்தனை

சோஷலிசம் என்ற பெயரால் எல்லோரும் ஒரே மாதிரியான வாழ்க்கையை அமைத்துக் கொண்டு. ஒரே விதமான உணவு, உடை ஒரே அளவு செல்வம் ஆகியவற்றை அனுபவிக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்க முயலுகிறார்கள். ஆனால் இது சமத்துவம் ஆகாது. பணமும், வீடும், சொத்தும் மட்டும் பகிர்ந்து கொள்ளப்பட்டால் போதாது. அவற்றின் மீது வைக்கும் ஆசைகளும் ஒரே மாதிரி, எல்லோருக்கும் இருக்க வேண்டும்.

எல்லோருக்கும் ஒரே மாதிரி, ஒரே அளவு ஆசை இருக்கும் போது போட்டி மனப்பான்மை போய்விடும். அதிகாரம், பதவி ஆகியவை மீது கொள்ளும் பற்றும் போய்விடும். யாருடைய பணியையும் வேறு யாரும் மனவித்தியாசம் இல்லாமல் மேற்கொள்ளலாம். பணம், நிலம், வீடு, சொத்து ஆகியவற்றின் அநுபவம் தன்னாலே ஒரே மாதிரியாகி விடும். அறிவுக்காக எல்லோரும் படிப்பார்கள். சேவை செய்வதற்காக வேலை பார்ப்பார்கள். சமூகம் நன்றாக இருப்பதற்காகத் தொழிலில் ஈடுபடுவார்கள். எல்லோருக்கும் ஒரே மாதிரியான வாய்ப்பும் பலனும் இருப்பதால், போட்டி, பொறாமை எதுவும் இராது.

சமமான வாய்ப்புகளும் சமமான ஆசைகளும் இருந்தால் உலகமே உன்னதமாக ஆகிவிடும்.

கண்ணன் வாழ்ந்த கோகுலத்தில் இப்படித்தான் இருந்தது. அவன் கோபாலனாக இருந்த இடத்தில் எல்லோரும் அவன் முன்னிலையில் ஒரே மாதிரியாக வாழ்ந்தார்கள். 'கோ' என்பது பசுவை மட்டும் குறிப்பதல்ல; சுபீட்சத்தையும் மகிழ்ச்சியையும் தரும் எதுவுமே அப்படித்தான் குறிப்பிடப்படும். அவற்றுக்கு நாயகனாக இறைவன் இருக்க, நாம் ஒருவரிடம் மற்றவர் அன்பு காட்டி ஒரே மாதிரி வாழமுற்பட வேண்டும். அப்போது சங்கடங்கள் யாவும் தீர்ந்து போகும்.

(நன்றி: [illegible])

### நாளை

**சித்திரை 10**

**வெள்ளிக்கிழமை**

திதி: அட்டமி
பிற்பகல் 5.35 வரை.
நட்சத்திரம்: பூசம்
முன்னிரவு 8.17 வரை.
சுபநேரம்: 6.00-7.30
ராகுகாலம்: 10.30-12.00
[பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி]

### உதய வாக்கு

ஒரு பொழுது போக்கிலிருந்து இன்னொரு பொழுதுபோக்கை உண்டாக்குவது வாழ்க்கையின் முன்னேற்றமல்ல தேவையிலிருந்து இன்னொரு தேவையைக் கண்டுபிடிப்பது தான் வாழ்க்கையின் முன்னேற்றம்.

- சாமுவேல் ஜோன்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒலிம்பியா தமிழ் தட்டச்சு இயந்திரம்20''(புதியபயோட்றோணியோ இயந்திரம் (Gestetner 145, மொடல்) விற்பனைக்குண்டு. தொடர்பு: R. மருதம், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (65007)

கூட்டுறவுப் பரிசோதகர் பரீட்சைக்குரிய வழிகாட்டி வினாவிடை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருப்பதி இல. 15, மெமோறியல்லேன், மானிப்பாய். (65020)

கொக்குவில் கிழக்கில் திருநெல்வேலி Farm School -க்கு எதிராக செல்லும் கலைவாணி மில் ஒழுங்கையில் 2 பரப்புக் காணியும் அதற்குள் அமைந்துள்ள மூன்று அறைகளுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி மகாலட்சுமி சண்முகநாதன், மே / பா சு. மகேஸ்வரி, செம்பாட்டு ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில். (65038)

ஐந்து நாள் கோழிக்குஞ்சுகளும், 1 மாதக் கோழிக்குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 68, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (64996)

15 K.W 3 பேஸ் லிஸ்ரர் எஞ்சின் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மேஜர் ஷண் (ஷண் றெக்கோடிங் ஸ்பொட் அருகில்) 24/2, பெரியகடை, யாழ்ப்பாணம். (64987)

### தவறிவிட்டது

கனகலிங்கம் இராயுதன் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் 820070100V) கோப்பாயில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். கனகலிங்கம் நீமாட்டி கோப்பாய் மத்தி, கோப்பாய். (65025)

### இலகு திருமண சேவை

1968 கார்த்திகை குறைந்த கிரக பாவம் ஜேர்மனியில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் ஜேர்மனியில் தேவை. சுயமாக செல்லக்கூடியவர்களும் விண்ணப்பிக்கலாம். சகல உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிமலா, K. K. S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [65033]

## தொடர்சொற்பொழிவு

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயத்தில் 'விநாயகர் புராணம்' என்னும் தலைப்பில் தொடர் தெய்வீகச் சொற்பொழிவு ஆரம்பமாகியுள்ளது.

கடந்த திங்களன்று ஆரம்பமாகிய வருடாந்த மகோற்சவத்தையொட்டியே இத் தெய்வீக தொடர் சொற்பொழிவும் இடம் பெற்று வருகிறது. தினசரி மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும் இச் சொற்பொழிவை செஞ்சொற்செல்வன் ஆறு. திருமுருகன் நிகழ்த்தி வருகிறார். (ஐ-99)

## விளையாட்டு மைதானம் விஸ்தரிப்பு

வலி.தென்மேற்கு, ஏப்ரல் 22

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

கிரிக்கெட், உதைபந்தாட்டம், ஹொக்கி ஆகிய விளையாட்டுக்களுக்குரிய தளங்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. (ஐ-185)

## கடற்றொழில் சமாசத்தின் பெயர் விரைவில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசம் விரைவில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசம் என பெயர் மாற்றஞ் செய்யப்படவுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற மேற்படி சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இவ்விடயம் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக சமாசத் தலைவர் சி. தவரெட்ணம் தெரிவித்தார்.

தற்சமயம் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த 38 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமது சமாசத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளதாகவும் —

இவ்வாறு அங்கத்துவம் பெற்றுள்ள சங்கங்களின் அபிவிருத்தி முயற்சிகள் குறித்து ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் —

அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-7-17)

## வீதி விபத்தைத் தடுக்க ஏற்பாடு

புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தியில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் விபத்துக்களைக் கட்டுப்படுத்த இராணுவத்தினரும் பொலிஸாரும் புதிய நடைமுறைகளை ஏற்படுத்தி உள்ளனர்.

பலாலி வீதியில் சந்தியின் இருபக்கங்களிலும் வாகனங்களின் வேகங்களைக் குறைத்துச் செலுத்துமாறு வாகனக் குறியீடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் விரைவாகச் செல்லும் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது. (ஐ-133)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி

செல்வி ஆறுமுகம் சசிலதா

அவர்களின் தாயாரின்

மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதி வருட மாணவர்கள்,
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(65052)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

**வசந்தி கணேசலிங்கம்**

தோற்றம் 23–07–1966 | மறைவு 24–03–1999

திதி: 22–04–99

24–03–99இல்சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கின் இறுதிக்கிரியைகளில் பலவகைகளிலும் பங்கு கொண்டவர்களுக்கும், நோயுற்றிருந்த காலை உதவிய யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்களுக்கும், தமிழ் நாடு, சென்னை அப்பலோ மருத்துவமனை மருத்துவர்களுக்கும், நண்பர்களுக்கும், யாழ். பல்கலைக்கழக நண்பர்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

22–04–99 அன்று நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திக்கிரியைகளில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

அன்புடன்
ப. கணேசலிங்கம்,
திருமதி ச. பரமேஸ்வரி (தாய்),
திரு திருமதி அருந்தவரத்தினம் (சகோதரன்),
திரு. திருமதி ச. சபேஸ்வரன்
(சகோதரன்—நோர்வே).

'இரத்தின வாசம்'
இராஜ வீதி,
நீர்வேலி வடக்கு.

[95043]

## பார்வைக் குறைபாடுடைய மாணவரின் கல்விக்கு நிதிஉதவி

மூளாய், ஏப்ரல் 22

யாழ். மாவட்டத்தில் உள்ள பார்வைக் குறைபாடு உடைய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக புதிய திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மேற்படி கல்வித்திட்டத்திற்கு நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

மேற்படிதிட்டத்தின் மூலம் கட்புலனற்ற மாணவர்களுக்கென விசேடமான கல்விப் போதனை முறைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இக்கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் வாழ்வகம் என்ற நிறுவனம் மேற் கொண்டு வருகிறது. (ஐ - 99)

## தேவை

### காசாளர் - லிகிதர்

யாழ். நகரில் இயங்கும் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

விளம்பரதாரர் இல. 876
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (65055)

## WANTED

### ACCOUNTS CLERK [ Trainee ]

QUALIFICATION: Advanced Level in commerce Subjects
AGE: Below 25 Yrs.
SEX: Male

Knowledge of English Typing will be an added Qualification.

**Apply before 30 - 04 - 1999**

S. J. B. TRADE AGENCY
NO. 39, 3rd CROSS STREET,
JAFFNA. (65050)

வலி. கிழக்குத் தென்பகுதி

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

நீர்வேலி

### அயடீன் கலந்த உப்பு

மேற்படி சங்கத்தில் அயடீன் கலந்த உப்பு விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் நீர்வேலியில் அமைந்துள்ள சங்கத் தலைமைக்கந்தோரில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்

நீர்வேலி.

[சி/7264[

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 18 – 04 – 1924



உதிர்வு 03 – 05 – 1998

## அமரர் கனகசபை இரத்தினசபாபதி

[Navy சீனக்குடா பெற்றோலியக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்ஆகியவற்றின் ஓய்வு பெற்ற ஊழியர்]

ஆண்டு ஒன்றாகி விட்டதப்பா!
நடமாடிய வீட்டில் படமாகி விட்டீர்களே அப்பா!
என்றும் எங்களை ஆசீர்வதியுங்கள் அப்பா!
என்றென்றும் நீங்காத நினைவுடன்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(65041)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ்ஸில் சிங்கள பெயர்ப் பலகையை அகற்றும்படி பிரதேசசபை கோருகிறது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

வலி. மேற்குப் பகுதியில் சேவையில் ஈடுபடும் வட பிராந்திய போக்குவரத்துச் சபைப் பஸ்களில் பொருத்தப்பட்டுள்ள சிங்கள மொழியிலான பெயர்ப் பலகைகளை அகற்றுமாறு போக்குவரத்து அமைச்சரைக் கோரும் தீர்மானம் ஒன்றை வலி. மேற்குப் பிரதேச சபை நேற்று நிறைவேற்றியது.

வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் தலைமையில் நடந்த சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சில வருமாறு:-

★ குடாநாட்டில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் சனத்தொகைக் கணக்கெடுப்பை உடன் நிறுத்த வேண்டும்.

★ சீநோர் பிரதேசத்தில் காணி சுவீகரிக்க எடுக்கும் முயற்சியைக் கைவிடவேண்டும்.

★ வலி. வடக்கில் மேற்கொள்ள திட்டமிடப்பட்ட காணிச் சுவீகரிப்பை உடன் நிறுத்தி அந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கவேண்டும்.

★ சுழிபுரம் — திருவடிநிலைத் தீர்த்தக்கேணிப்பகுதியில் மக்கள் தமதுபிதிர்க்கடன்களை நிறைவேற்ற அனுமதிக்கப்படவேண்டும்.

ஈ. பி. டி. பி., புளொட் உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

(இ-3-7)

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை

## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி 1999/2000

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும் ஆண்டு 9 [தரம்-8] கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க/அரச கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்களில் அல்லது சுயதொழிலில் (விவசாயம், மீன் பிடி மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான ''தொழிலாளர் கல்விச்சான்றிதழ்'' கற்கை நெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விவரங்களையும் பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் ரூபா 20 செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை நேரில் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பித்து அல்லது பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20 ரூபாவுக்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் சுயவிலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ., 10 செ. மீ. அளவினதான கடித மேலுறையுடன் 'உதவிப் பதிவாளர் / தேர்வுகளும் அனுமதிகளும் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி; 14-05-1999. தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பாடநெறியிற் பங்கு பற்றுவோர் எழுத்துத் தேர்வு மூலமாகவும், நேர்முகத் தேர்வு மூலமாகவும் தெரிவு செய்யப்படுவர்.

குறிப்பு: 10 வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்
20-04-1999

[சி/7265]

## தொழில் நுட்பக் கருத்தரங்கு

வடமராட்சி, ஏப்ரல் 22

வடமராட்சி கல்விவலயத்தைச் சேர்ந்த தரம் 9 இல் கல்வி கற்பிக்கும் விஞ்ஞான ஆசிரியர்களுக்கான தொழில் நுட்பக் கருத்தரங்கு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை, மருதங்கேணி கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கு இன்று வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும்-

கரவெட்டி கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கு நாளை கரவெட்டி திரு இருதயக் கல்லூரியிலும்- கருத்தரங்கு நடைபெறும் என வடமராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்தி ஒன்றின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி அருளானந்தம் அறிவித்துள்ளார்.

(ஐ-173)

## பழமரச் செய்கை கருத்தரங்கு

அரியாலை, ஏப்ரல் 22

பழமரச் செய்கை, வீட்டுத் தோட்டம் தொடர்பான கருத்தரங்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் இலவசமாக மரமுந்திரிகைக் கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு அரியாலை விவசாயிகள் சம்மேளனம் கேட்டுக் கொண்டுள்ளது.

(க-17)

## புதிய மின்கம்பங்கள்

கோண்டாவில், ஏப்ரல் 22

கொக்குவில் நந்தாவில், பொற்பதி ஆகிய பகுதிகளில் சேதமடைந்து காணப்பட்ட மின்கம்பங்கள் மாற்றப்பட்டு புதிய கம்பங்கள் நடப்பட்டதுடன் மின் விநியோகத்திற்கு ஊறுவிளைவிக்கக் கூடிய வகையில் உள்ள மரக்கிளைகள் மின்சாரசபை ஊழியர்களினால் வெட்டப்பட்டுள்ளன.

(க-ரி)

## உதவித் திட்டம்

வடமராட்சி, ஏப்ரல் 22

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள அங்கவீனர்களுக்கு உதவும் பொருட்டு வடமராட்சி லயன்ஸ் கழகம் செயல் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

இச்செயல் திட்டத்தின் முதற் கட்டமாக அதிர்ஷ்ட இலாபச் சீட்டு ஒன்றினை நடத்தி அதன் மூலம் பெறப்படும் வருமானத்தில் அங்கவீனர்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன. (ஐ-173)

## பல இலக்கு......

(ஏழாம் பக்கத் தொடர்ச்சி)

வளலாய் வரை கரையோரப் பிரதேசத்தைச் சுற்றிப் பாதுகாப்பு வலயமொன்றை ஏற்படுத்தி, இராணுவக் குடியிருப்புக்களை அமைத்து விமானத்தளம், கடற்படைத் தளம் அமைப்பது இன்னும் இத்தளங்களை அந்நிய வல்லாண்மைச் சக்திகளின் முதலீடுகளைப் பெற்று அபிவிருத்தி எனும் பெயரில் இந்துமா சமுத்திரப் பிராந்தியத்தில் நாட்டங் கொண்டுள்ள சக்திகளின் நலன்களைப் பேணுவது எனும்திட்டங்களுடன், தமிழ் மக்களைப் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றிவிட்டு உயர் பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்படுமானால், தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையங்கள் விற்கப்படுவது மட்டுமல்ல, இராணுவ வல்லாதிக்கப் போட்டிகளினால் சீரழியப் போவது திருமலையை அடுத்து யாழ். மாவட்டமும், தமிழ் மக்களும் தான் என்பதை முன் எச்சரிக்கையுடன் அவதானிக்க வேண்டும்.

வடபகுதியில் நயினாதீவு புத்தகோவில்பௌத்தர்களின் வரலாற்று ரீதியான வழிபாட்டுத்தலம் எனும் பின்னணியில் அத்தீவுகளின் முக்கியத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தையும்;

இந்தியாவின் சேது சமுத்திரத் திட்டம் தமிழ் நாட்டின் தெற்கு எல்லைக் கரையோரமாக, மன்னார்க்குடா — பாக்குநீரிணைப்பரப்பின் வட எல்லையில் நிறைவேற்றுவதைத் தடுத்து நிறுத்த இலங்கையும், இந்தியாவுக்கெதிரான வல்லாண்மைச் சக்திகளும் முயற்சிக்கக் கூடிய சாத்தியங்கள் பற்றியும் கவனத்திற் கொள்ளவேண்டும். மற்றொரு கண்ணோட்டத்தில் நோக்கினால் காங்கேசன் சிமெந்து உற்பத்தியாயினும் காங்கேசன் துறைமுக அபிவிருத்தியாயினும், இராணுவக் குடியிருப்புக்களை ஏற்படுத்துவதாயினும், தெற்கிலிருந்து வேலைவாய்ப்புகளைப் பெறக்கூடிய ஊழியர்கள், தொழிலாளர்கள், பாதுகாப்புப் படைகளின் குடும்பங்கள் காலாகாலத்தில் தங்கியிருப்பதற்கான பாதுகாப்பான விடுதிகளும், வீடுகளும் மற்றும் தேவைகளுக்கும் காங்கேசன்துறை வலி— வடக்கு பிரதேச பாதுகாப்பு வலயம் பயன்படும்.

இவ்வாறான இராணுவ மயமாக்கலின் மூலம் தமிழின [illegible] சிதைப்பது தான் இறுதி நோக்கமாக இருக்க முடியும். ★

(வளரும்)

## அடுத்த மாத முற்பகுதியில் மாவட்ட தடகள போட்டி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

யாழ். மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் அடுத்தமாத முற்பகுதியில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பிரதேச செயலர் பிரிவுகள் மட்டத்தில் கடந்த சில மாதங்களாக நடத்தப்பட்டு வந்த தடகள போட்டிகள் முடிவுற்றதையடுத்து மாவட்ட மட்டத்திலான போட்டிகள் நடைபெறவுள்ளன.

மாவட்ட மட்டத்திலான தடகள விளையாட்டுப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் விளையாட்டு உத்தியோகத்தர்களின் உதவியுடன் மாவட்ட விளையாட்டதிகாரி கே. டபிள்யூ விமலராஜன் மேற்கொண்டு வருகின்றார்.

இதேவேளை—

மாவட்ட மட்டத்திலான மென்பந்து சுற்றுப்போட்டி இம் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி முதலாமிடத்தையும், யாழ். பற்றீசியன் வி. க. இரண்டாமிடத்தையும்—

பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு வி.க. முதலாமிடத்தையும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு வி. க. இரண்டாமிடத்தையும்—

ஆண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு வி.க. முதலாமிடத்தையும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு வி. க. இரண்டாமிடத்தையும்—

பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியில் பமிலியன் வி. க. முதலாமிடத்தையும், யாழ். பல்கலைக்கழக அணி இரண்டாமிடத்தையும்—

பெற்றுக்கொண்டன.

யாழ். மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாக விளையாட்டு அமைச்சினால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சில போட்டிகள் மட்டுமே நடத்தப்பட்டு வந்தன. ஆனால் இவ்வருடம் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

## வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

யாழ்ப்பாணம் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 15 வயது - உடுவில் மகளிர் கல்லூரி எதிர் யாழ்ரன் கல்லூரி.

★ 17 வயது - நெடுந்தீவு றே. க. மகளிர் கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

★ 17 வயது — யாழ். இந்து மகளிர் கல்லூரி எதிர் மெதடிஸ்ற் மகளிர் கல்லூரி.

★ 19 வயது — நெடுந்தீவு றோ. க மகளிர் கல்லூரி எதிர் மெதடிஸ்ற் மகளிர் கல்லூரி.

★ 19 வயது — வட. இந்து மகளிர் கல்லூரி எதிர் கலாநிதி தியாகராஜா ம. ம. வி

(ஐ-6)

## சேவைநலன் பாராட்டு விழா

சங்கானை, ஏப்ரல் 22

சங்கானைக் கல்விக் கோட்டத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வலிகாமம் வலயத்தின் பிரிவு மூன்றின் உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச்சென்ற வ. கணேசலிங்கத்தின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

(க-29)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவின் ஏற்பாட்டில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படும் கருத்தரங்கு இன்று காலை 9.30 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்தப்படவிருக்கின்றது.

(இ-3)

★ ★ ★

வடமராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இம்மாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஐ-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

தேசிய கலை இலக்கியப் பேரவை நடத்தும் திறனாய்வியல் வாராந்த தொடர் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ. அருந்தவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 'தமிழ் மரபில்செயன்முறைத் திறனாய்வு' என்ற பொருளில் பேராசிரியர் நா சுப்பிரமணியன் கருத்துரை வழங்குவார்.

(க-27)

## கண்ணீர் அஞ்சலி

அராலி அண்ணா விளையாட்டுக் கழகத்தின் ஆரம்ப வீரனும் வளர்ச்சி வீரனும் சிறந்த கோல் காப்பாளனுமாகிய

### காந்தி ஜெகதீசன்

அவர்கள் 21-04-99 இல் இறைபதமடைந்த செய்தி அறிந்து அவரது இழப்பால் எமது கழகம் வேதனை அடைகின்றது. அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அண்ணா விளையாட்டுக் கழகம்

அராலி. (65064)

## அவைக்காற்றுகைக் குழு - சுன்னாகம்

நாடக பாட ஆற்றுகை — வெனிஸ் வணிகன்

இடம்: யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

காலம்: 2-5-99 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி

நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளும் இடங்கள்:

1) D.M.I. யாழ்ப்பாணம்
2) மருதனார்மடம்.

(சி/7271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். வலயக்கல்விப் பணிமனை மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 17 வயது—மல்லாகம் ம. வி. எதிர் ஹாட்லி.

★19 வயது — புத்தூர் சோமஸ்கந்தாஎதிர் ஹாட்லி.

★ 19 வயது—மல்லாகம் ம.வி. எதிர் கரவெட்டி விக்கினேஸ்வரா.

இந்த ஆட்டங்கள் காலை 8 மணி முதல் நடைபெறும்.

★ 17 வயது தெல்லிப்பழை மகாஜனா எதிர் ஆவரங்கால் மகாஜனா.

★ 17 வயது – கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் நாவற்குழி ம. வி.

★ 19 வயது—யாழ். சென்ரல் எதிர் தெல்லிப்பழைமகாஜனா.

இந்த ஆட்டங்கள் பிற்பகல் 3 மணி முதல் நடைபெறும். (இ-3)


விஷ்ணு
மினி சினிமா

காட்சிகள்:
10-30, 2-30, 4-30

விஜயகாந்த் - சூர்யா
நடித்த
Ⓤ பெரியண்ணா
நாளைய வெளியீடு!

ராஜேந்தரின்
Ⓤ மோனிசா
என் மோனோலிசா

இணுவில் மேற்கு,
இணுவில்.
(65061)


### காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்)

சமுகமளித்து காணாமற் போனோர் பற்றிய தகவல்களைச்சமர்ப்பித்து விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விசாரணைகள் இன்று காலை 9: 00 மணி தொடக்கம் தொடர்ந்து நடை பெறவுள்ளன.

### கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வந்தாறு மூலைப் பல்கலைக் கழகத்தில் இருந்து படையினரால் கைது செய்யப்பட்ட 148 பேர் தொடர்பாக இதுவரை தகவல் இல்லை.

வாழைச்சேனை நாவலடி முகாமுக்கு அருகில் உள்ள கிறவல் நிலத்தில் அவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக தற்சமயம் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்கள் இந்த ஆதாரங்கள் தொடர்பாக சாட்சியம் அளிக்க முன்வந்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் திகதி சத்துருக்கொண்டான், பனிச்சனடி, கொக்குவில், பிள்ளையாரடி ஆகிய பகுதிகளில் கைது செய்யப்பட்ட 35 குழந்தைகள் உட்பட 191 பேர் குறித்தும் இன்னமும் தகவல் இல்லை.

இவர்கள் கொல்லப்பட்டு சத்துருக்கொண்டான் முகாமுக்கு அருகில் புதைக்கப்பட்டதாக தற்சமயம் ஆதாரங்கள் கிடைத்துள்ளன—

இப்படி அவர் தெரிவித்தார். (இ-3)

### தெற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பாய்வதால் போக்குவரத்துக்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் படையினரும், கடற்படையினரும் உதவி வருகின்றனர்.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஜனாதிபதி விசேட குழு ஒன்றை நியமித்துள்ளார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக இதுவரை எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்புக்கு அருகே அமைந்துள்ள அங்வெல அணைக்கட்டு உடைப்பெடுக்கும் ஆபத்து நிலவுவதாகவும்—

அப்பகுதியில் வாழும் மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு மாற்றப்பட்டு வருவதாகவும் — தெரிவிக்கப்பட்டது. [இ-3-6-ரீ]

### எலும்புகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

எல். டி. அல்விஸுக்கு இன்று விமானம் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலீஸ் உத்தியோகத்தர்கள் இந்த எலும்புகளையாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச் சென்று கொழும்பில் ஒப்படைக்கவுள்ளனர்.

இந்தப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட வெற்றுத் துப்பாக்கி ரவைகள் மற்றும் தடயப் பொருள்கள் அரச இரசாயன பகுப்பாய்வுபிரிவுக்கும் எடுக்கப்பட்ட மண்மாதிரிகள் மண்ணியல் நிபுணருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இந்தப் பொருள்களை அனுப்புவது குறித்த மனு ஒன்றை யாழ். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். வி. ஸ்ரீஇராஜேஸ்வரன் எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளார்.

இதேவேளை இந்த மனிதப் புதைகுழியிலிருந்து எலும்புகள் மீட்கப்பட்டது தொடர்பான சாட்சிய அறிக்கையை நேற்று மூன்றாவது நாளாக சட்ட வைத்திய அதிகாரி யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சமர்ப்பித்தார். (இ-5)

### கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

ளர்கள் கிளிநொச்சி, மல்லாவி வைத்தியசாலைகளில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்)

தினமும் செல்வதற்கு பதிவு செய்த பயணிகள் அந்த அந்தத் தினங்களில் அழைத்துச் செல்லப்படுவர்.

நாளையும், நாளை மறுதினமும் பயணம் செய்ய இனி புதிதாக எவருக்கும் ரிக்கெட் விநியோகிக்கப்படமாட்டாது.

திங்கட்கிழமை முதல் வழமைபோல் சேவைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

### எதிர்க்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை நேற்று நாடாளுமன்றத்தில் விடுத்த பின்னர் எதிர்க்கட்சி ஆசனத்துக்குச் சென்று அவர் அமர்ந்தார்.

### காங்கிரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசு, அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா, ராஷ்ட்ரிய ஜனதா தள் தலைவர் லாலு பிரசாத் யாதவ், சமாஜவாதித் தலைவர் முலாயன்சிங் யாதவ், இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மாற்று அரசு ஒன்றை அமைப்பது என்றும் அதற்கு காங்கிரஸின் ஆதரவைக் கோருவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

காங்கிரஸின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் செல்வி ஜெயலலிதாவும் லாலுபிரசாத் யாதவ்வும் நேற்று சோனியாகாந்தியின் உத்தியோகபூர்வவாசஸ்தலத்துக்குச் சென்றனர்.

சோனியாகாந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு வழங்குவதில் இடதுசாரிக் கட்சிகள் மத்தியில் இன்னும் இணக்கம் ஏற்படவில்லை.

பெரும்பாலான கட்சிகள் காங்கிரஸ் தலைமையில் ஆட்சி நிறுவப்பட்டால் நிபந்தனையுடனேயே அந்த அரசை ஆதரிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளன.

இத்தகைய நிலையிலேயே மாற்று அரசு அமைக்கும் முயற்சியில் காங்கிரஸ் அல்லாத எதிர்கட்சிகள் ஈடுபட்டுள்ளனர்.

அதே சமயம் பாரதிய ஜனதாக் கட்சி நேற்று தனக்கு ஆதரவான 270 பேரின் பெயர்ப் பட்டியலை ஆதரவுக் கடிதங்களுடன் ஜனாதிபதி கே. ஆர். நாராயணனிடம் சமர்ப்பித்தது. (இ)


சிந்தையில் நிறைந்து விந்தையில் மறைந்த எந்தையாம்

# இரத்தினம் புனிதராசா அவர்களுக்கு

(செல்வராசா)

பந்தமாய் நாம் தரும்

# 31 ஆம் நாள் இதய அஞ்சலி



தோற்றம்
02 — 06 — 1961

மறைவு
23 — 03 — 1999

கடமையிற் தவறாத கண்ணியனாய், நகைப்பொடு நடைவந்து நண்ணியனாய், விவேகநிறை நிர்வாகியாய், பழகுதற் கினியனாய், இளகிய உளத்தனாய், அன்பனாய், நண்பனாய், ஆற்றவர்க்குதவிடு தோழனாய், பண்பாளனாய், பார்போற்று வல்லிபுர ஆழ்வார்தம் பக்தனாய், சித்தமதில் நித்தமும் எம் நிறுவனத்து ஏற்றமதே தத்துவமாய் நின்றுழைத்த சத்தியனாய், எம் உறவிற் கலந்து உயிரைப் பிரிந்த புனிதராசா (செல்வராசா) விபத்திற் சிக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவேளை, இறுதி வரை அவரின் உயிரைக் காப்பாற்றத் தம்மால் முடிந்தளவு முயற்சித்த யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர்கள், தாதிகள், உதவியாளர்கள், அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து உதவியோர் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பல்துறை சார் நிறுவனத்தார், சகல வர்த்தக நிறுவன உரிமையாளர்கள், ஊழியர்கள், வகுப்புத் தொழிலாளர்கள், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோர் மற்றும் பல்வேறு வழிகளிலும் எம் துயரில் பங்கு கொண்டோர், உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேருக்கும் எங்களதும் எங்கள் சக நிறுவனங்கள் சார்பினதும் மனங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (22-04-99) வியாழக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**எழுகதிர் விற்பனை நிலையம்,**
6, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

**அம்பிகை களஞ்சியம்,**
304, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

**சின்னத்தம்பி அன் கோ.**
14, கண்டி வீதி,
சாவகச்சேரி.


## கிளிநொச்சியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

யம் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற பலர் காணாமற் போயிருந்ததாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்சமயம் அந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் போது மலசலகூடங்கள், பற்றைகள் ஆகியவற்றிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ள எலும்புக் கூடுகள் காணாமற் போனவர்களினுடையவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## ஐந்து இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

மடு முகாமில் தங்கியிருந்த இராசதுரை சசிகுமார் (வயது 22), அவரது சகோதரர் இராசதுரை சிவகுமார் (வயது 20), மற்றும் மகாலிங்கம் விமலராஜன் (வயது 26), சதாசிவம் கண்ணதாசன் (வயது 26), சீனிவாசன் யுகேந்திரன் (வயது 21) ஆகியோர் விசாரணைக்காகக் கடந்த 17 ஆம் திகதி கண் கட்டிய நிலையில் அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும்—

அவர்கள் குறித்து இதுவரை தகவல் இல்லை என்றும்—

அவர்களைக் கண்டு பிடித்து உதவுமாறும்—அவர்களது உறவினர்கள் மடுத்தேவாலயக் குருவிடம் கோரினர்.

இதனைத் தொடர்ந்து மடுத் தேவாலயக் குருவான அருட்திரு. தேவசகாயம் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட சமயம், இவர்களைத் தாம் கைது செய்யவில்லை என்று பதில் அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அவர் மன்னார் ஆயருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

அதேசமயம்—நேற்று மடுவில் 209 க்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் படையினரால் தீவிரமாக விசாரிக்கப்பட்டனர். (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-04-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org